பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

கீன் - திருநெல்வேலி
கலை, வர்த்தகம்
பிரிவு II
பொருளியல் — திரு. வரதராஜன்
வர்த்தகம் — திரு. ஜெயராமன்
அரசியல் — திரு. மனோகரன்
புவியியல் — திரு. சண்
ஆரம்பம்: 7-30 a. m.
2 - 7 - 88

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ 2/-

அளவையியல் — திரு. S. S. மனோகரன்
கணக்கியல் — திரு. சௌந்தி
தமிழ் — திரு. குழந்தை
இந்துநாகரிகம் — திரு. சாரை
பிரிவு II
ஆரம்பம்: 7-30 a. m.
2 - 7 - 88
கீன் சென்ரர்
திருநெல்வேலி

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஸ்ரீ ஆனி மீ 14 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1408 துல்ஹஜ்தா பிறை 13 ( 28 - 06 - 1988 ) UTHAYAN- A lively Tamil Daily கதிர்: 117

# முல்லைத்தீவு அன்னையர் உண்ணாவிரதம், பேரணி!

## தமிழருக்கு அமைதி வாழ்க்கை தேடித்தர ராஜீவிடம் வலியுறுத்து

முல்லைத்திவு, ஜூன் 28

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தேடி, இந்திய அமைதிப் படையினர் "ஒப்பரேஷன் செக்மேற்" தாக்குதல் நடவடிக்கையை, முல்லைத்தீவுக் காடுகளில் மிகத்திவிரமாக மேற்கொண்டிருக்கும் அதேவேளை-

முல்லைத்திவு நகரத்தில் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த அறுநூற்றுக்கும் மேற்பட்ட அன்னையர்கள் யுத்த நிறுத்தம் கோரி ஒருநாள் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

உண்ணாவிரதம் முடிந்தபின்னர் அன்னையர்கள் முல்லைத்தீவுச் சந்தைக்கு அருகில் இருந்து, இந்திய அமைதிப்படை முகாமுக்கு, மிக அமைதியாக, மௌனப் பேரணி ஒன்றை நடத்தி, முகாம் அதிகாரியிடம் இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்து. தமிழ் மக்களுக்கு அமைதி வாழ்க்கையைத் தேடித் தருமாறும், அதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறின் அன்னையர்கள் கூட்டாகச் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அந்த மகஜரில் அன்னையர்கள் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவுச் சந்தைக்குச் சமீபமாகக் கடந்த வெள்ளிக்கிழமை அன்னையர்கள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளையும் சேர்ந்த அறுநூற்றுக்கும் மேற்பட்ட தாய்மார்கள் இந்த அடையாள உண்ணாவிரதத்தை அனுஷ்டித்தனர்.

உண்ணாவிரதம் முடிவில் அமைதிப் பேரணியாகச் சென்று கையளிக்கப்பட்ட மகஜரில் பின்வரும் முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டிருந்தன;-

★ தொடர்ந்து பல ஆண்டுகாலமாக ஸ்ரீலங்கா இராணுவத்தின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் அவசர ஆலோசனை; ஈழத்தமிழர் விவகாரம் குறித்து

புதுடில்லி, ஜூன். 27

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி நேற்று புதுடில்லியில் முக்கிய அமைச்சர்கள் மூவருடன் ஈழத் தமிழர்களின் விவகாரம், இலங்கையில் தற்போதுள்ள நிலைமை என்பன குறித்து அவசரமாக ஆராய்ந்தார்.

வெளிநாட்டு அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ், பாதுகாப்பு அமைச்சர் திரு. கே. சி. பந்த், வெளியுறவு இணை அமைச்சர் திரு. நட்வர் சிங் ஆகிய மூவருடனுமே பிரதமர் அவசர ஆலோசனைகளை நடத்தினார்.

இந்தப் பேச்சுக்களின் போது ஈழத்தமிழர் சம்பந்தமான சில முக்கிய விடயங்கள் பற்றி ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது.

இச்சந்திப்பின் போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற்றும் கூட இருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இதுவரை நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து இந்த மந்திராலோசனையின் போது விரிவாக ஆராயப்பட்டிருக்க வேண்டும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். (அ-ஒ)

## நயினை அம்பாள் தேர்த் திருவிழா இன்று

நெடுந்தீவு, ஜூன் 28

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழா இன்று சிறப்பாக நடைபெறுகிறது.

அம்பாள் இன்று செவ்வாய்க்கிழமை காலை எட்டு மணிக்கு சித்திரத் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவாள்.

இந்தியாவிலிருந்து விசேடமாகத் தருவிக்கப்பட்ட ரோசா, செவ்வந்தி, மருக்கொழுந்து, லாமிச்சைவேர், வெட்டிவேர் மாலைகளால் அம்பாளுக்கு விசேட அலங்காரம் செய்யப்பட்டிருக்கும்.

இன்றைய தேர்த்திருவிழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு பெரும் எண்ணிக்கையான யாத்திரிகர்கள் குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் நயினாதீவுக்கு விரைந்தவண்ணம் உள்ளனர்.

இன்று நடைபெறும் தேர்த் திருவிழாவில் 1983ஆம் ஆண்டுக்கு முன்னரைப்போல பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொள்வார்கள்என எதிர்பார்க்

(6ஆம் பக்கம் பார்க்க)



நயினை தேர்த்திருவிழா சிறப்பிதழ் 7ஆம், 8ஆம் 9ஆம், 10ஆம் பக்கங்களில்

## மின்சார விநியோகம் சீரானது

யாழ்ப்பாணம், ஜூன் 28

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை தடைப்பட்ட குடாநாட்டுக்கான மின்சார விநியோகம், நேற்று பிற்பகலளவில் சீரடைந்தது.

மின்தடைக்கு வன்செயல் காரணம் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டது.

ஹபரணைக் காட்டுப் பகுதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததாலேயே மின்தடை ஏற்பட்டதாக மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மின்தடையால் பாவனையாளருக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு மின்சார சபையினர் வருத்தம் தெரிவித்தனர். (ஒ)

### மட்டக்களப்பு, அம்பாறையில்
## சிவில் நிர்வாகம் இப்போது வழமையில்

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சிவில் நிர்வாக அலுவல்கள், வங்கி அலுவல்கள் என்பன வழமைபோல் செயற்படத் தொடங்கியுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த 20ஆம்திகதி முதல் சிவில் நிர்வாகத் தடையைத் தளர்த்திய போதிலும் மற்றுமோர் குழுவினர் தடை விதித்தனர்.

இந்நிலையில் மேற்படி அமைப்பு பொதுமக்கள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் 3ஆம்நாள் அத்தடையை நீக்கி விடுவதாக அறிவித்தது.

கச்சேரி அதிகாரிகளும், இந்தியப்படை அதிகாரிகளும் பிரஸ்தாப அமைப்புடன் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்தியதாகத் தெரிய வருகிறது.

அதனைத் தொடர்ந்து கச்சேரி இயங்கத் தொடங்கியதை அடுத்து அலுவல்கள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

நீதிமன்ற அலுவல்கள் மட்டும் இயங்கிவருகின்றன. ஆனால் நீதிமன்ற அமர்வுகள் எதுவும் இடம் பெறவில்லை. (ஒ-21)

### யாழ் நகரப் பகுதியில்
## வாரத்தில் மூவர் விபத்தினால் மரணம்!

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாண நகரையும் நகரை அண்டிய பகுதிகளிலும் வாகன விபத்துகளினால் வாரத்தில் சராசரி மூன்று பேர் மரணமடைந்துவருகின்றனர். பத்துக்கும் அதிகமானோர் படுகாயங்களுக்கு உள்ளாகிறார்கள்.

யாழ் ஆஸ்பத்திரி வட்டாரப் புள்ளி விவரப்படி தினமும் வாகன விபத்துக்களினால் மட்டும் ஐந்துக்கும் மேற்பட்டோர் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர்.

இளைஞர்களும் முதியவர்களுமே இவ்விபத்துக்குள்ளாகி வருகிறார்கள் என்றும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விபத்துக்களினால் வாரத்தில் மூன்றுபேர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## விசேட பஸ் சேவை

யாழ்ப்பாணம் ஜூன் 28

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தின் இறுதி நாட்களை முன்னிட்டு வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் கொண்டாவில் சாலை விசேட பஸ் சேவைகளை ஒழுங்கு செய்துள்ளது.

இந்தச் சேவைகள் தினமும் 10 நிமிடத்திற்கு ஒன்றாக குறிகாட்டுவானுக்கு சேவையாற்ற உள்ளது. (ஒ-10)

## மலையகத் தமிழர் 900 பேர் கொழும்புக்கு
### தூத்துக்குடியிலிருந்து

கொழும்பு, ஜூன் 28

கண்டி, நுவரெலியாவைச் சேர்ந்த மலையகத் தமிழ் அகதிகள் 900பேர் எதிர்வரும் முதலாம் திகதி தூத்துக்குடியில் இருந்து கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

தூத்துக்குடியில் இருந்து தமிழ் அகதிகள் இலங்கை திருப்பி அனுப்பப்படுவது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது.

இதுவரை காலமும் இராமேஸ்வரத்தில் இருந்துதான் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டார்கள். (ஒ-எ)

## பிரதியமைச்சர் காமினிக்கு சூடு!

கொழும்பு, ஜூன் 28

இனந்தெரியாதவர்கள் நேற்றுக் காலை பிரதி அமைச்சர் காமினி அத்துக்கோறளை மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பிரதி அமைச்சர் காயம் படாமல் தப்பிவிட்டார். அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரி திருப்பிச் சுட்டதில் தாக்குதல் நடத்தியவர்கள் என்று கூறப்படுபவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

இரத்தினபுரியிலுள்ள உப- தபால் கந்தோர் ஒன்றின் அருகில் இச்சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றது. (ஒ-எ)

## முச்சந்தி முரளி



ஏதேதோ விதங்களால் எல்லாம் தமிழன் சாகிறது போதாது என்டு விபத்தாலையும் சாகிற தலைவிதியைப் பாத்தியளே....!

## மேலும் 4 ஆயிரம் துருப்புகள்

கொழும்பு, ஜூன் 28

தென் மாகாணத்துக்கு மேலும் நான்காயிரம் துருப்புக்களை ஸ்ரீலங்கா இராணுவம் அனுப்பி வைத்திருப்பதாக கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

வன்செயல்கள் அதிகரித்து வருவதைத் தொடர்ந்து அதிக துருப்புக்கள் அனுப்பும் முடிவை அரசு எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## தொழிற்சங்க பிரமுகர் குத்திக் கொலை

கொழும்பு, ஜூன் 28

இலங்கைக் சம்யூனிஸ்ட் கட்சித் தொழிற்சங்கத் தலைவரும் பிரபல தொழிற்சங்கவாதியுமான எல். டபிள்யு. பண்டித்த கடந்தஞாயிறு மாலை இனந்தெரியாதோரால் குத்திக் கொல்லப்பட்டார்

(6ஆம் பக்கம் பார்க்க]

## திருமலைத் தளபதி

திருகோணமலை, ஜூன்28

இந்திய அமைதிப் படையின் திருகோணமலை மாவட்டத் தளபதியாக பிரிகேடியர் பி. டி. மிஸ்ரா பதவி ஏற்றுள்ளார். (ஒ-150)

## ஸ்ரீலங்கா படையினர் கடலில் அட்டகாசம்
### மீனவர்கள் புகார்

கடற்றொழிலாளர்மீது ஸ்ரீலங்கா கடற்படை மீண்டும் தாக்குதல், பொருள்கள் பறிமுதல், இறால்-மீன் அபகரிப்பில் ஈடுபட்டு வருவதாக மீனவர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

நேற்றும் நேற்றுமுன்தினமும் நெடுந்தீவு, குறிகாட்டுவான் கடற்பிரதேசத்தில் இப்படியான சம்பவங்கள் இடம்பெற்றதாக அவர்கள் கூறினர்.

'றெஜிபோம்' பெட்டிகளை அடித்து உடைப்பதுடன் 'கொம்பாஸ்' முதலிய கருவிகளைப் பற்றிச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

கடல் வலயச் சட்டங்களால் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து, அனுமதி வழங்கப்படுகின்ற நேரங்களில் தொழில் செய்து வாழ்வதற்கும் முடியாமல் மேற்குறிப்பிட்ட சம்பவங்களால் மேலும் நசுக்கப்பட்டு வருவதாக மீனவர்கள் கவலை தெரிவித்தனர். (ஒ-51)

உ
சாவகச்சேரி
ஸ்ரீ துர்க்கையம்பாள் தேவஸ்தானம்
பரிவார மூர்த்திகள்
மகா கும்பாபிஷேக விழா

கிரியாரம்பம்:
ஆனி 15 ஆம் நாள் (29-6-88)
புதன் காலை 6-00 மணி

எண்ணெய்க்காப்பு:
ஆனி 16 ஆம் நாள் (30-6-88) வியாழன்
காலை 8.30 முதல் மாலை 6.00 மணி வரை

மகா கும்பாபிஷேகம்:
ஆனி 17 ஆம் நாள் (1-7-88)
வெள்ளி காலை 9.00—9.36 மணி வரை.

குறிப்பு:- தொடர்ந்து மண்டலாபிஷேகமும் நவக்கிரக சாந்தியும் நடைபெறும். நவக்கிரக சாந்தியில் பங்குகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர், நட்சத்திரங்களைத் தாமதியாது பதிவுசெய்து கொள்ளவும்.
அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!
இங்ஙனம்
பிரம்மஸ்ரீ ப. மகாகணபதி சர்மா
தர்மகர்த்தா
(4840)

## சுபநேரம்

28- 06 - 1988
ஆனி - 14
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:
10.26 முதல் 11.56வரை
ராகுகாலம்:
02.56 முதல் 04.26வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## வேண்டுகோள்
### திரு. க. கந்தசாமி

(தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம்)

நீதியின் பெயரால் கேட்கிறோம்! மக்களின் தொண்டனை விடுதலை செய்யுங்கள். எந்தவேளையும் மக்கள் சேவையே மூச்செனக் கொண்டவரை, உலகின் மூலை எங்கணும் எமது தமிழ் மக்கள் துயரை எடுத்துச் சென்று உதவிகள் பெற்று கண்ணீரைத் துடைத்தவரை பணியின் குறுக்கே எத்தந்த இடையூறு வரினும், உடையா மனதோடு உறுதியாய் நின்று உதவிய மாமனிதரை எதற்காகக் கடத்தினீர்கள்? தமிழ் அகதிகள் புனர்வாழ்வு அமைப்பின் தாபக உறுப்பினரை, தளராத தொண்டரை உடல் நலிந்த வேளையிலும் உறுதி குலையாது சேவை செய்த உத்தமரை கடத்தியமை தர்மத்தையும், நீதியையும் மயக்கித் தலைகுனிய வைக்கும் செயலாகும். அவர் உயிருக்கு ஊறு நேரின் தமிழ்க் குலம் தன் முகத்தில் சேறு பூசிக் கொள்வதற்கு ஒப்பானதாகும். எனவே மக்களின் தொண்டரை உடனடியாக விடுதலை செய்யுமாறு தர்மத்தின் பெயரால் தமிழ் இனத்தின் கண்ணீரின் பெயரால் கேட்டுக் கொள்கின்றோம்.

— உறவினர்கள்
(4568)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சகல விதமான T. V றேடியோ, பூஸ்டர் அன்ரனு வயர் சுவர்க்கடிகாரங்கள், கைக்கடிகாரங்கள், மின் விசிறிகள், சைனு மின் அடுப்புகள், T. V ஸ்ராண்ட் றைஸ் குக்கர் மற்றும் எலக்றிக் வயறிங் பொருட்கள், பெற நாடுங்கள் New City Traders 135, Kasturiar Road, Jaffna (C5482)

சகலவிதமான றேடியோ வீடியோ, டெக். T. V. ஆகியவற்றில் உதிரிப்பாகங்களை (வீடியோ Head I. C, ரான்சிஸ்டர் அன்ரனு பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையில் பெற்றுக்கொள்ள நாடும் இடம் Mini Trades entre J. M. C. Building No. 3, Stanly Rd, Jaffna. (4709)

தேக்கு அலுமாரிகள், சட்டில்மெத்தைகள் விட்டுப் பாவனை ShowCase (தேக்கு), சாப்பாட்டு மேசைகள்கதிரைகள்காரியாலயமேசைகள், கடை ShowCase(பெரிது), கண்ணுடிமேசைகள், இரும்புத்தளபாடங்கள், சண்ணுடிப் பொருட்கள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன் 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (சென் பற்றிக்சந்திக்கு அருகில்) (4549)

Liplands Farm கூடிய சிக்கிரத்தில் அதிக நிறையுள்ள வளர்ச்சியடையும் Lohmann பிறவுன் சேவல் குஞ்சுகள் (29-6-88) புதன்கிழமை குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. முகவரி இல 9, கந்தையாலேன், கூழுவத்தை ரேட், சுன்னுகம் ஸ்டேசனுக்கு அண்மையில். (4730)

சகல விதமான ரேடியோ T. V வீடியோ டெக் ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் (வீடியோ கெட் I. C டிரான்ஸ்சிஸ்டர், அன்ரனு பூஸ்டர்) ஆகியவற்றை மலிவான விலையிலும் நம்பிக்கையுடன் பெற்றுக்கொள்ள நாடுங்கள் R. V சென்ரர் F6. நவீன சந்தை மேல்மாடியில் யாழ்ப்பாணம். உரிமையாளர் விசு. (4732)

## வீடு விற்பனைக்கு

கிளிநொச்சி அக்கராயன் குளம், ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் மூன்று ஏக்கர் வீட்டுக் காணியுடன் மூன்று ஏக்கர் வயல் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. 4 அறைகள் ஹோல், குசினி, மலசலகூடம், 2 கிணறுகள் அத்துடன் சகல பிரயோசனங்களும் அடங்கியது. இ. சங்கரலிங்கம் 490, அக்கராயன்குளம். (4552)

## வெளியீடு- விற்பனை

நயினை நாகபூஷணி ஆலய வரலாறும் அருட்பா மாலையும் கவிஞர் நயினை நா. க. சண்முகநாதபிள்ளை BSc. விலை ரூபா 20/- தொலைபேசி 23631 வெளியீடு விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (4718)

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் அத்துடன் சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும் Fudo Enterprises 39/17 3rd Lane, Power House Road Jaffna (Samy & Co Shastra அருகாமையில். (C5300)

## தேவை

என்ஜின் நல்ல நிலையிலுள்ள சிறிய கார் தேவை. Prefect, Minor, A - 30 போன்றவை விரும்பத்தக்கது. விலை விபரங்களுடன் உடனே தொடர்பு கொள்ளவும். C/o 170, உதயன், யாழ்ப்பாணம். (4569)

கொம்பசிட்டர் பைன்டேர்ஸ் உடன் தேவைப்படுவதால் நேரில்வரவும். ஆண் பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது. முந்திக் கொள்வோருக்கு முதலிடம்வழங்கப்படும். சித்திரா அச்சகம் 664, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (4741)

## வீட்டுப்பணிப் பெண் தேவை

நன்முக வேலை செய்யக் கூடிய 15ற்கும் 30 வயதுக்கு மிடைப்பட்ட பணிப்பெண் தேவை. தங்குமிடவசதியுண்டு. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்: செ.நடனசபாபதி இல: 32, மருதடி வீதி, யாழ்ப்பாணம். (4698)

## மணமகன் தேவை

Jaffna Vellala Hindu Parents in Colombo Seek for Only Daughter 39 Years, Dowry House in Colombo Land in Jaffna Cash Local or Foreign Currency and Jewellery Send Horoscope with Details 251,C/o Uthayan Jaffna. (4736)

## காணவில்லை

களுவாஞ்சிக்குடி தும்பங்கேணி 40ம் கொலனி சிவலிங்கம் ரவி என்ற 12 வயதுள்ள சிறுவன் துன்னாலை வடக்கு க. சண்முகம் வீட்டிலிருந்து 28-5-88 இல் காணுமல் போய்விட்டார். சுமாரான உயரமும், கறுப்பு நிறமும் மெல்லியதோற்றமும் உடைய இவரைப் பற்றிய தகவல் தருவோருக்கு சன்மானம் வழங்கப்படும். தொடர்பு முகவரி, க. சண்முகம் அல்லையம்பதி துன்னாலை வடக்கு, கரவெட்டி. மந்திகை வைத்தியசாலைக்கு அண்மையில். (4729)

காந்தி கணபதிப்பிள்ளை ஆகிய நான் எனது கிராமசேவகரால் உறுதி செய்யப்பட்ட அடையாள அட்டை, பேர்ஸ் என்பனவற்றை யாழ். கோப்பாய் பஸ்சில் தவறவிட்டு விட்டேன். எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன் (4735)

## தவறிவிட்டது

88 ஸ்ரீ 4586 CD 200 மோட்டார் சைக்கிளின் புத்தகமும் சாரதிப் பத்திரமும் K. K. S. ரேட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்துக் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொடர்பு கொள்ளும் முகவரி: சி. விஸ்வரத்தினம். பூநறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில். (4728)

ஞானராசா வாகிய என்னுடைய அடையாள அட்டை இல. 603262603 V வெலிங்டன் தியேட்டருக்கு அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், சன்மானம் வழங்கப்படும். (4738)

1970 ஆம் ஆண்டு முனைத்தீவில் பிறந்து நியூ லலிதா கவுஸ், ராஜேந்திராலேன் 24/47 இல் ஸ்தூரியார் வீதியில் வசிக்கும் நாகலிங்கம் ஆனந்தராஜாவாகிய எனது அடையாள அட்டை வெலிங்டன் தியேட்டரில் தவறிவிட்டது ஒப்படைப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும். (4740)

## கலர் படம்

உங்கள் கலர்ப்படச் சுருள்களை மைக்கிரோ கொம்பியூட்டர் மூலம் கொழும்பு - சிங்கப்பூர் ஆகிய இடங்களில் பிரதி செய்ய விரும்புகின்றீர்களா? Processing இலவசம் பிரதி P. C 4/50 Only Processing 25/- தரமாகவும் விரைவாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ள கொழும்பு ஸ்ருடியோ யாழ்ப்பாணம். (C/4910)

## திருமண சேவை

எம்மிடம்டாக்டர்கள் என்ஜினியர்கள், பட்டதாரிகள், தொழில்நுட்பதாரிகள் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள் வெளிநாட்டில் தொழில் புரிவோர், சொந்த தொழில் செய்பவர்கள்(இருபாலார்) குறிப்புகளும் உண்டு. உங்கள் தகைமைக்கேற்ற மணமகன் மணமகளை கிறிஸ்தவர்களும் தேர்ந்தெடுக்க அலையாது நீங்கள் நாடவேண்டியது "மாங்கல்யா" 81/1 பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. (4708)

# பம்பைமடுவில் குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்

வவுனியா ஜூன் 28

கடந்த புதன்கிழமை இரவு ஆயுதந்தாங்கிய கோஷ்டி ஒன்றினல் பம்பைமடுவைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் கடத்தப்பட்டார்.

பம்பைமடுவைச் சேர்ந்த சுமார் 42 வயதுடைய 7பிள்ளைகளின் தந்தையான க.செல்வராசா என்பவரே கடத்தப்பட்டவர் ஆவார்.

சம்பவ தினத்தன்று அவரது வீட்டுக்கு வந்த ஆயுதபாணிகளான சிலர், தண்ணீர் வாங்கி அருந்திவிட்டு விசாரணைக்கென அவரை அழைத்துச் சென்றுர்களாம்.

மறுநாள் காலை ஒன்பது மணிக்கு விசாரணையின் பின் அவரை விடுவதாகக் கூறிச் சென்ற போதிலும் இன்னும் அவர் வீடு திரும்பவில்லை என்று கூறப்படுகிறது. (இ-164)

# ரோப் போட்டோஸ்ரட் பிரதி சேவை

உங்கள் போட்டோஸ்ரட் பிரதிகளை

மிகவும் தெளிவானவைகளாகவும்,
மலிவானவைகளாகவும்
வேகமானவைகளாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

## எமது சேவையின் விபரங்கள்

- ★ சுருக்கப் பிரதிகள்
- ★ விரிவுப் பிரதிகள்
- ★ இருபக்கப் பிரதிகள்
- ★ மறுபக்கப் பிரதிகள்
- ★ தன்னியக்க வெளிப்படுத்தல்
- ★ மூவர்ணத்தில் தனித்தனிப் பிரதிகள் (பச்சை, நீலம், கறுப்பு)
- ★ இறக்குமதி செய்யப்பட்ட கடதாசிப் பிரதிகள்.
- ★ நீண்ட காலத்திற்கு நிலைத்திருக்கக்கூடிய பிரதிகள்

**நீங்கள் போட்டோஸ்ரட் பிரதியை நாடும்பொழுது "ரொப்" போட்டோஸ்ரட் சேவையையே எந்நேரமும் நாடுங்கள்.**

**ரோப் போட்டோஸ்ரட் பிரதி சேவை**
**யூனிவேர்சல் ரெலெக்ஸ்**
550, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். [4567]

# புதிய உயர் கல்லூரி
## வெளிவாரிப் பட்டப்படிப்பு
## ஆண்டு 1989/90

கலைமாணி B. A.
வணிகமாணி B. Com.

க. பொ. த. [உயர்தரப்] பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் இலவசமாக நேரிலும் தபால் மூலமும் பெற்றுக் கொள்ளலாம்.

விரிவுரையாளர் குழு, கலைமாணி B.A.

| | |
|---|---|
| பொருளியல் | — குமாரவேல் |
| தமிழ் | — குழந்தை |
| புவியியல் | — குணராசா |
| இந்துநாகரிகம் | — அருள்நங்கை |
| மெய்யியல் | — சிவானந்தன் |
| அரசியல் | — குமார் |

**முக்கிய குறிப்பு:** வணிகமாணிப் பயிற்சி நெறிக்கு பிரபல வர்த்தக விரிவுரையாளர் **திரு. தேவாவும்** பிரபல கணக்கியல் விரிவுரையாளர் **திரு. வன்னியசிங்கமும்** இணைந்து செயற்படவுள்ளனர். மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க வார இறுதி விரிவுரைகள், கிழமை நாட்கள் விரிவுரைகள் என இரு பிரிவாகப் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

**விண்ணப்ப முடிவு திகதி 31-7-88**

விபரங்களுக்கு: S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

கிளை:
**புதிய உயர் கல்லூரி**
மல்லாகம்.

(சி/5552)

# சாராயம் குடிப்போர் எண்ணிக்கை வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 28

1986 இலும் பார்க்க 1987இல் சாராயம் அருந்தியவர்கள் எண்ணிக்கை குறைவு என்று கலால் திணைக்களம் தெரிவித்தது.

1986 இல் சுமார் 3 கோடி 16 லட்சத்து 62 ஆயிரத்து 732 லிட்டர் சாராயம் விற்பனையாகியது.

1987 இல் 2 கோடி 91 லட்சத்து 14 ஆயிரத்து 494 லிட்டர் சாராயம் விற்பனை செய்யப்பட்டதாக திணைக்களத்தின் புள்ளி விவர அறிக்கை தெரிவிக்கிறது.

சாராயம் குடிப்பவர்களில் 30 சத வீதமானேர் கள்ளச் சாராயம் குடிக்கின்றனர்.

சம்பளையில் நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில் 700 ஆண்கள் தினமும் அல்லது வாரத்துக்கு மூன்று தடவை சாராயம் குடிக்கிருர்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த 700 கடும் குடிகாரரில் 450 பேர் தினமும் காலை போத்தல் சாராயம் குடிக்கத் தவறுவதில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டது.

பெண் குடிகாரர்களில் 85 சதவீதமானேர் ஆண் குடிகாரர்களை மணந்தவர்கள் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

25-75 வயதுக்கும் இடைப்பட்ட பெண்களே சாராயம் குடிக்கின்றுர்கள். அவர்களில் பெரும்பாலோர் கொழும்பு மாவட்டத்தில் வடக்கு, மத்திய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-எ)

# TOP PHOTOSTAT COPY SERVICE

Collect your Photostat Copy
Sharper! Cheaper!! Faster!!!

Features :

- ★ Reduction Copying
- ★ Enlargement Copying
- ★ Dual Page Copying
- ★ Both Side page Copying
- ★ Automatic Exposser Adjustment
- ★ Copying in Three Colours (Green, Blue, Black)
- ★ Imported Special Copying Papers
- ★ Our Photostat Copies Always Last Long.

THINK OF PHOTOSTAT COPY
**Think of TOP Photostat Copy Service**

Top Photostat Copy Service
Universal Telex
**550, Hospital Road,**
**JAFFNA.**
[4566]

# ஈழம் வாழ் மக்களுக்கு ஓர் நற்செய்தி!!

சென்னை மவுண்ரேட் புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்லில் அமைந்துள்ள

# சாயி ரவல்ஸ்
## அன் ரூர்ஸ்

நிறுவனத்தார்
யாழ் மக்கள் நன்மை கருதி இப்போது 24/1, இல் சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ் கிளை ஸ்தாபனத்தை அமைத்துள்ளார்கள்.

- ★ சத்திய சாயிபாபாவின் நேரடித் தரிசனம் பெற விரும்புகின்றீர்களா? நேரடித்தரிசனமும், ஆசீர்வாதமும் பெற்றபின்! புனித ஸ்தலங்களை தரிசிப்பதற்கும் அரிய சந்தர்ப்பம் அளிக்கின்றுர்கள்,
- ★ CANADA செல்வதற்கும் ஒழுங்கு செய்யப்படும்.

**சாயி ரவல்ஸ்**
**அன் ரூர்ஸ்**
24/1, பெரியகடை வீதி,
பெரியகடை, யாழ்ப்பாணம்.
(அலோசியஸ் ரெக்ஸ்ரைல்ஸ் அருகில்)

தலைமை அலுவலகம்:
**சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
33, 1ஆம் மாடியில் ஜெமினி ஸ்ருடியோ
புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்
602, மவுண்ட்ரேட்,
சென்னை 6006
தமிழ்நாடு.
தொலைபேசி: 475382 [C5424]

# வகுப்புகள் 2 ஆம் திகதி ஆரம்பம்

சுன்னுகம், ஜூன் 28

மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் முறைசாராக் கல்வி மோட்டார் பொறித் தொழில் வகுப்புகள் எதிர்வரும் இரண்டாம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றது.

எட்டாம் வகுப்புசித்தி அடைந்த ஆண் - பெண் இருபாலாரும் இப்பயிற்சிக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் விண்ணப்பங்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் வித்தியாலய அதிபர் திரு ஐ மனோகரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார். (இ-27)

# மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபை

உ

23-6-88ல் உதயன் பத்திரிகையில் கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய தர்மகர்த்தா சபைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களாக அறிவித்தலில் காட்டப்பட்டிருப்பவர்கள் சட்டப்படி தெரிவுசெய்யப்பட்டவர்கள் ஆவர் என்பதை அடியார்களுக்கு அறிவிக்கின்றேம். குறித்த ஆலயம் யாழ் மாவட்ட நீதிமன்ற வழக்கு இல: TR20ல் பதியப்பட்ட விதிப்பின்படியும் திருவாகத்திட்டத்தின்படியும் நிர்வகிக்கப்படுகின்றது.

திரு. மு.சிவசுப்பிரமணியம், திரு: சு.பாலசுந்தரம் ஆகியோர் கூறியுள்ளவாறு தர்மகர்த்தா சபை நிர்வாகத் திட்டத்திற்கு விரோதமாகவும் தான்தோன்றித்தனமாகவும் செயற்படவில்லை என்பதைத் தெரிவிக்கின்றேம்.

கௌரவ தலைவர்.
இ. பொன்னம்பலம்.

கௌரவ செயலாளர்
க. பாலசுப்பிரமணியம்.

(4766)

- ★ **உங்களுக்கு வேண்டிய மணமக்களைத் தேர்ந்தெடுக்கவும்**
- ★ **காணிக் கட்டடங்களை விற்கவும், வாங்கவும்**
- ★ **சோதிடம் பார்க்கவும்**

தொடர்பு கொள்ளுங்கள்:
கனடா, சவூதி, மணமக்கள் கைவசம் உள்ளனர்

● **பிரதிநிதிகள் தேவை**

சந்திக்கும் நேரம்
காலை 9,00 மணி முதல் 1.00 மணி வரை

**வரோதயன்**
**Varothayan**
இந்துக் கல்லூரி அருகாமை
பலாலி வீதி, உரும்பராய்.
(4572)

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



திருமதி. இளையதம்பி தங்கம்மா

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 18- 10- 1912 | 29- 05- 1988 |

அன்பின் உருவாய் அறிவின் சுடராய் பண்பின் நிறைவாய், பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து எமக்கெல்லாம் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாள் சென்றுலும் உங்கள் நினைவு எமது இதயத்தை விட்டு என்றென்றும் பிரியாது நிற்கும்.

இன்று செவ்வாய்க்கிழமை 28- 6- 1988 மு.ப. 10.00 மணி அளவில் மாதகல் கிழக்கில் வாழும் அன்னரின் மகன் திரு. இ. அதிகாரசிங்கத்தின் "தங்கவில்லா" இல்லத்தில் அந்தியேட்டி வைபவம் நடைபெறும்.

அன்னரின் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(4816)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி ரதோற்சவ சிறப்பிதழ் ★


அம்பாள் அருள் புரிவாராக
பாய், பெட்டி, தும்புத்தடி, மற்றும் பொருட்களை மலிவாகப் பெற்றுக்கொள்ள

**குமார்ஸ்ரோர்ஸ்**
பெரியகடை,
யாழ்ப்பாணம்.



அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்.
சகல விதமான பலசரக்குகளை நிதான விலையில் பெற்றிட

**நல்லூர் ரேடர்ஸ்**
கோயில் வீதி,
கொக்குவில்.



அம்பாள் ரதோற்சவத்தை வாழ்த்துகின்றோம்

**இயந்திரம்ஸ்**
336, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்,



கோயில் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்

**பிரதம குருக்கள்**
நந்தாவில் அம்மன் கோவில்.



அம்பாளின் அருளை நாடுகின்றோம்
★ புடவை வகைகள்
★ ரெடிமேட் ஆடைகள்
★ பான்ஸி குட்ஸ்
★ சூட்கேஸ், குடைவகைகளை
மொத்தமாக, சில்லறையாகப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**அருணகிரி ரேடிங்**
21, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



தேரேறி வரும் அம்பாளை வணங்குகின்றோம்
★ தரமான டொபி, இனிப்பு
★ பிஸ்கட் வகைகளை
மொத்தமாகப் பெற்றுக்கொள்ள

**ஒலிம்பிக் இன்டஸ்றீஸ்**
பொற்பதி வீதி,
கொக்குவில்.



அம்பாளின் திருவருளை நாடுகின்றோம்
கல்யாணப் பட்டுப் புடைவைகளுக்கு

**கணேசன் ஸ்ரோர்ஸ்,**
63, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 24025


## வயல்கள் மத்தியில் வனப்புடன் திகழும் மனோன்மணி அம்மன்

*கொக்குவில்நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்மன் ஆலய ரதோற்சவம் இன்று வெகு சிறப்பாக நடைபெறுகிறது. அதையொட்டி இச்சிறப்பு மலர் வெளியிடப்படுகிறது.*

கொக்குவில் நந்தாவிலின் கண்ணே, பல குளங்களும், நெல் வயல்களும், தோட்ட நிலங்களும், பலவித மான சோலைகளும் நிரம்பியுள்ள மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன முறையாக அமைந்துள்ள இடத்திலே, இற்றைக்கு இருநூறு வருடங்களுக்கு முன்னர் எமது முன்னோர்கள் ஓர் அம்பாள் ஆலயத்தை அமைக்க முயற்சித்தார்கள்.


அப்பொழுது, வண்ணை ஸ்ரீவைத்தீஸ்வர ஆலயத்தைக் கட்டிக்கொண்டு இருந்த ஸ்ரீவைத்திலிங்கச் செட்டியார் நந்தாவில் கற்புலத்தில் கட்டிட வேலைகளுக்குக் கற்களை எடுத்து வந்தார்கள். கற்புலத்திலே செட்டியார் திரவியம் கண்டார்! ஒளி கண்டார்! என்றும், அதைத் தொடர்ந்து இங்கு உள்ள மக்களும், செட்டியார் அவர்களும் கற்புலத்தில் அம்பாளுக்கு ஓர் ஆலயம் அமைத்தார்கள் என்றும் எமது மூதாதையர்கள் கூறக் கேட்டுள்ளோம்.

இக்கோவில் நந்தாவில் கற்புலத்துக் கண்ணகை அம்மன் கோவில் என இக்கிராமத்திலும் அயல் கிராமங்களிலும் பிரசித்தி பெற்று விளங்குகிறது.

இந்தக் காலத்தில் ஸ்ரீ சின்னத்தம்பி ஐயர், சின்னையர் என்ற உயர் பிராமண குல உத்தமர்கள் பூசையைத் திறம்பட நடாத்தி வந்தார்கள் என்றும் -

அவர்களுக்குப் பின் அவர்களுடைய சந்ததியினர் கோயிற் பூசைகளை நடாத்தி சிறப்பித்தார்கள் - என்றும் அறிகிறோம்.

1920 ஆம், 1921 ஆம் ஆண்டளவில் இப்பகுதியின் வைத்தியர் திரு. அ. சின்னத்துரை அவர்களதும், மற்றும் பல



சைவ அன்பர்களினதும் முயற்சியால் ஸ்ரீமனோன்மணி அம்பாள் பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது.

அதன் பின்னர் 1938 இல் சைவசமய சீலர்களாகிய திரு. சி. முத்துவேலு ஜே. பி. அவர்களைத் தலைவராகவும், திரு. இ. சீனிவாசகம் அவர்களைக் காரியதரிசியாகவும், திரு. த. பொன்னம்பலம் அவர்களை தனாதிகாரியாகவும் கொண்ட ஓர் ஆலய பரிபாலன சபை அமைக்கப்பட்டது.

1943 ஆம் ஆண்டளவிலே திரு. சி. அருளம்பலம் அவர்களும், ஊர் வர்த்தகர்களும் ஏற்கனவே உள்ள பரிபாலன சபையாரும் சேர்ந்து ஒரு பொதுக்கூட்டத்தைகூடி ஏகமனதாக மூன்றுதர்மகர்த்தாக்களையும் தெரிவுசெய்தனர். அதற்குரிய உறுதிகளும் எழுதப்பட்டன.

காலப்போக்கில் தர்மகர்த்தாக்களில் சிலர் இறந்துவிட்டமையால், ஆரம்ப தர்மகர்த்தாக்களில் ஒருவரான திரு. சி. அருளம்பலத்துடன், திரு. செ. ஆறுமுகம், திரு. க. இராமனுதன் ஆகிய இருவரும் சேர்க்கப்பட்டு ஆலய பரிபாலனம் சிறப்புற நடைபெற்று வருகின்றது.

1966ஆம் ஆண்டு திரு. ஆ. அப்பையா அவர்களின் உதவியுடன் கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது கோவிலின் வளர்ச்சியின் முதல் படிக்கல்லாகும்.

1978 ஆம் ஆண்டளவில் இராஜகோபுரம், முன் மண்டபம், உள்வீதிக் கொட்டகைகளும் பரிபாலன சபையினரால், பொதுமக்களின் உதவியுடன் சிறப்புற அமைக்கப்பட்டது.

ஆரம்ப காலங்களில் இரு நேரப் பூசைகளும் ஆனிமாதத்தில் தேருடன் கூடிய பத்து நாள் திருவிழாக்களும் பங்குனித் திங்கள் தோறும் பொங்கல் பூசைகளும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. காலப்போக்கில் அவற்றுடன் நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை பூசைகளும் சேர்ந்து சிறப்புற நடைபெற்று வருகின்றன.

1966ஆம் ஆண்டு அம்பாளுக்கு ஒரு சித்திரத் தேர் அமைக்க வேண்டுமென பரிபாலன சபையும் ஊர்மக்களும் விரும்பி, அதற்கென திருப்பணிச் சபையை அமைத்தனர். திருப்பணிச் சபையின் அயரா முயற்சியினால் திருநெல்வேலியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் அவர்களின் புத்திரர்கள் திரு. தம்பித்துரை, திரு. சிவரத்தினம் சகோதரர்களால் அம்பிகையின் வரலாறு அடங்கிய ஒரு சித்திரத் தேர் அமைக்கப்பெற்று வெள்ளோட்டம் 1966 ஆம் ஆண்டு ஆடிமாதம் 7 ஆம் திகதி அப்போதைய அரச அதிபர் ஸ்ரீகாந்தா தலைமையிலே நடைபெற்றது.

முதன் முறையாக சித்திரத் தேரிலே அம்பாள் 12-7-1966 இல் பவனி வந்தாள். இருபத்திரண்டு வருடங்களின் பின்னர் பிள்ளையாருக்கும், முருகப் பெருமானுக்கும் தனித் தனியே இரு சித்திரத்தேர்கள் செய்யப்பட்டன.

இன்றைய தினம் தேர்மீது பவனிவரும் அழகுக் காட்சியைத் தரிசித்து அம்பாளின் இஷ்டசித்திகளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

40 வருடங்களாக ஆலயத்தின் சகல வளர்ச்சியிலும் பங்குபற்றி ஊர் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற சிவஸ்ரீ நா. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் அம்பாளின் திருவடியெய்த அவரது சிரேஷ்ட புத்திரன் வேதாகம கிரியா சிரோன்மணி மு. ஜெயந்திநாதக்குருக்கள் இப்பணியைத் தொடர்ந்து பொது மக்களின் உதவியுடனும், பரிபாலன சபையுடனும் சேர்ந்து சிறப்புற நடாத்தி வருகிறார். ★


அம்பாள் அருள் புரிவாராக!
சகல விதமான பலசரக்குச் சாமான்களையும் நிதான விலையில் பெற்றிட

**மயில்வாகனம் ஸ்ரோர்ஸ்**
கோயில் வீதி,
கொக்குவில்,



அம்பாள் அருள் புரிவாராக!
ஓடர் நகைகள் குறித்த நேரத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
ஒருமுறை விஜயம் செய்தால் உண்மை விளங்கும்

**மதராஸ் ஜுவலறி மாட்**
தங்க வைர நகை வியாபாரம்
264, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அம்பாளின் திருவருள் நாடி இறைஞ்சுகின்றோம்
குறைந்த விலையில் தரமான அரிசி மற்றும் பலசரக்குச் சாமான்களைப் பெற்றுக்கொள்ள

**முருகன் றைஸ்மில்**
முருகன் ஸ்ரோர்ஸ்
கண்டி வீதி, சாவகச்சேரி.



அம்பாள் அருள் புரிவாராக!
THAS TECHNICAL SERVICE
தாஸ் டெக்னிக்கல்ஸ் சேர்விஸ்

**KULA FOTOS**
indoor, Out door & Video Photo graphers
18, FOURTH ROSS STREET,
JAFFNA.



நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ரதோற்சவம் இனிது நடைபெற அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

**சிற்றி கொன்ராக்ரர்ள்**
கோயில் வீதி,
கொக்குவில் கிழக்கு.



அம்பாளின் அருளை இறைஞ்சுகின்றோம்

**அம்பிகாபதி பான்ஸி குட்ஸ்**
66, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.



அம்பாள் அருளை இறைஞ்சுகின்றோம்
சகல விதமான பீடிவகைகள், திறம்இந்தியா மூக்குத்தூள், கொழும்பு மூக்குத்தூள் மற்றும் சகல இந்தியப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

**சிவசம்பு ஸ்ரோர்ஸ்**
3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



அம்பாள் அருள்பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்
★ கோயில் அபிஷேகச்சாமான்கள்
★ விளைவுகூடம் மருந்துச்சரக்குகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**C. S. கைலாசம்பிள்ளை & சன்ஸ்**
5, பெரிய கடை, யாழ்ப்பாணம்.



அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்.

**நிரு டியூஷன் சென்ரர்**
ஸ்ரேஷன் வீதி,
கோண்டாவில்.



நந்தாவில் கற்புலத்து அம்பாள் அருளால் திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் எமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளோம்.

**நியூ சிகேபி ரெக்ஸ்ரைல்ஸ்**
7 (74) பெரிய கடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி. 23503


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அவர்கள் மீது நடவடிக்கையாம்

கொழும்பு, ஜூன். 28

அரசு வழங்கிய துப்பாக்கிகளைத்தொலைத்து விடும் மாகாண சபை உறுப்பினர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இதுவரை 40 மாகாண சபை உறுப்பினர்களுக்கு அரசினால் வழங்கப்பட்ட துப்பாக்கிகள் காணுமற் போய்விட்டன என்று முறையிடப்பட்டுள்ளது.

(ஓ-எ)

ஜீ.சி.ஈ. விசேஷ பரீட்சை:

## இவர்கள் தோற்ற முடியாது

யாழ்ப்பாணம், ஜூன்28

கடந்த டிசம்பர்மாதம் யாழ். மாவட்டத்தில் நடைபெறுது, ஏனைய மாவட்டங்களில் நடைபெற்ற ஜி. சி. ஈ, சாதாரணப் பரீட்சையில், எவ்விடத்திலாவது, ஏதாவதொரு பாடத்திலேனும் பரீட்சைக்குத் தோற்றியுள்ளஎந்தப்பரீட்சாத்தியும், புதிதாகநடைபெறவுள்ள ஜி சி ஈ விசேட பரீட்சையில் தோற்ற முடியாது.

இத்தகவலைபரீட்சைத் திணைக்கள அதிகாரி திரு தே சின்னத்துரை உதயனுக்குத்தெரிவித்தார்

அத்துடன் சமயம் மொழி தொழில்நுட்பப் பாடங்கள் என்பனவற்றில் பரீட்சாத்திகள்மாற்றத்தை ஏற்படுத்தவிரும்பின் தகுந்த ஆதாரத்துடன் ஏற்படுத்தலாம் எனவும், ஏனைய பாடங்களில் மாற்றங்கள்செய்ய முடியாதுஎனவும் மேலும் அவர் தெரிவித்தார்

(ஓ-114)

## மானிப்பாயில் விபத்து

ஒழுங்கையால் வந்து பிரதான வீதிக்கு ஏறியவர் பஸ் விபத்தில் சிக்குண்டு மரணமானுர்.

கோண்டாவிலைச் சேர்ந்த கந்தையா குணரத்தினம் (வயது 26) என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

மரணமானவர் கடந்த ஐந்து வருடங்களாக வெளிநாட்டில் வேலை பார்த்தவர் என்றும் —

கடந்தஇரண்டுவாரங்களுக்கு முன்னரே யாழ்ப்பாணம் திரும்பினுர் என்றும் தெரியவந்துள்ளது

இவருடன் சைக்கிளில் வந்த இவரது மனைவியும் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய்ச் சந்தைக்கு அருகாமையில் சடந்த சனிக்கிழமை இச்சம்பவம் நடைபெற்றது.

(ஓ-10)

## திருமலையில் அடகு நகை மீளளிப்பு

திருகோணமலையில் மக்கள் வங்கியில் அடகு வைத்த நகைகளுக்குரிய பணம் செலுத்தியவர்களுக்கு கடந்த சனிக்கிழமை முதல் நகைகள் மீளளிப்புச் செய்யப்பட்டுவருகின்றன.

கடந்த காலங்களில் பணம்செலுத்திய மொத்தம் 900 பேருக்கு நகைகள் மீளளிப்புச் செய்யப் படவுள்ளன.

திருகோணமலைமக்கள் வங்கிக் காரியாலயத்தில் வைத்து நகைகள் மீள வழங்கப்பட்டன.

(ஓ-150)

## ஊர்காவலர் வாபஸ்

கொழும்பு, ஜூன் 28

தென்மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட ஊர்காவல் படையினர் வாபஸ் வாங்கப்பட்டு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று அறிவிக்கப் படுகிறது.

சுமார் மூவாயிரம் ஊர்காவல் படையினரில் நூறுபேர் மட்டுமே தென்மாகாணத்தில் தற்சமயம் பணியாற்றி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நவாலியில் மெய்வல்லுனர் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 28

நவாலி கொத்தணி அமைப்புப் பாடசாலைகளுக்கான மெய்வல்லுனர் போட்டி இன்று 28 ஆம் திகதி காலை நவாலி மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கொத்தணி அதிபர் திரு.கே. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தனஞ்செயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றுர்.

## நயினையில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்

நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் விசேஷ உற்சவ காலத்தை முன்னிட்டு அடியார்களின் நன்மை கருதி சர்வதேச சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் கோவில் வீதியில் அமைந்துள்ள முதலுதவிச் சிகிச்சை முகாமில் சேவையாற்றுகின்றனர்.

வழமையைவிட இந்த ஆண்டு அதிகளவு சென் ஜோன்ஸ் படையினர் கடமையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

இந்த முகாமின் பொறுப்பதிகாரியாக மாகாண நிறைவேற்றுப் [illegible] செல்வராஜன் கடமை [illegible]

## அறிவித்தல்

முருகேசு
சட்டத்தரணிகளும் நொத்தாரிசுகளும்
கொழும்பு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில்

மேன்முறையீட்டு நீதிமன்ற மீளாய்வு விண்ணப்ப இலக்கம் 891/86 கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இலக்கம் 33010/5

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் பிரிவு 753 இன் கீழ் மீளாய்விற்காக செய்யப்படும் விண்ணப்ப விடயத்தில்.

ஐக்கிய அரபுக்குடியரசு, டுபாய் இணைச்சேர்ந்ததும், கொழும்பு - 1, லோட்டஸ் வீதி, இலக்கம் 64 இல் ஓர் கிளையையும் வியாபார ஸ்தலத்தையும் கொண்டதுமான யூனியன் பாங்க் ஒவ் த மிடில் ஈஸ்ட் லிமிட்டட்.

**வழக்காளி**

எதிர்

1. இலக்கம் 36, டீன்ஸ்டன் இடம், கொழும்பு-3 எனும் முகவரியைக்கொண்ட பஞ்சே லங்கா லிமிட்டட்.
2. இலக்கம் 12 A, கிறகறிஸ் வீதி, கொழும்பு -7 எனும் முகவரியையும் இலக்கம் 8234 கிறசன்ட் பீச் ரேட், பீஜன், மிச்சிகன் 48755 ஐக்கிய அமெரிக்கா இணையும் சேர்ந்த ஷரி, ஈஜின் ஷமர்சன்
3. இலக்சம் 10, கின்றெஸ் அவனியூ, கொழும்பு-4 எனும் முகவரியைக் கொண்ட கணபதிப்பிள்ளை பாலசந்திரன்,
4. இலக்கம்55, உருத்திராமாவத்தை, கொழும்பு-6 எனும் முகவரியைக் கொண்ட தம்பிப்பிள்ளை நடேஸ்வரன்.
5. இலக்கம் 99, சென்ற் பெனடிக்ஸ் மாவத்தை, கொழும்பு - 13 எனும் முகவரியைச் சேர்ந்த சுப்பையா குமாரசாமி.
6. இலக்சம் 26, அரத்துசா ஒழுங்கை, கொழும்பு-6 எனும் முகவரியையும், இலக்சம் 38, காலி வீதி, கொழும்பு - 6 இணையும் சேர்ந்த ஜெருல்ட் கோமிஸ் சமரநாயக்கா.

**எதிராளிகள்**

ஐக்கிய அரபுக்குடியரசு, டுபாய் இணைச்சேர்ந்ததும் கொழும்பு - 1, லோட்டஸ் வீதி, இலக்கம் 64 இல் ஓர் கிளையையும் வியாபார ஸ்தலத்தையும் கொண்டதுமான யூனியன் பாங்க் ஒவ் த மிடிள் ஈஸ்ட் லிமிட்டட்.

**வழக்காளி - மனுதாரர்**

எதிர்

1. இலக்கம் 36, டீன்ஸ்டன் இடம், கொழும்பு - 3 எனும் முகவரியைக் கொண்ட பஞ்சே லங்கா லிமிட்டட்.
2. இலக்சம் 10, கின்றெஸ் அவனியூ, கொழும்பு-4 எனும் முகவரியைக்கொண்ட கணபதிப்பிள்ளை பாலசந்திரன்.
3. இலக்சம் 55, உருத்திராமாவத்தை கொழும்பு-6 எனும் முகவரியைக் கொண்ட தம்பிப்பிள்ளை நடேஸ்வரன்.
4. இலக்சம் 99, சென்ற் பெனடிக்ஸ் மாவத்தை கொழும்பு - 13 எனும் முகவரியைச் சேர்ந்த சுப்பையா குமாரசாமி.
5. இலக்கம் 26, அரத்துசா ஒழுங்கை, கொழும்பு-6 எனும் முகவரியையும் இலக்சம் 38, காலிவீதி, கொழும்பு - 6 இணையும் சேர்ந்த ஜெருல்ட் கோமிஸ் சமரநாயக்கா.

**எதிராளிகள் - பிரதிவாதிகள்**

**மேற்குறிப்பிட்ட 1ஆம் எதிராளி—பிரதிவாதிக்கு**

வழக்காளி - மனுதாரர்- வங்கியின் விண்ணப்பம் அத்துடன் அணைக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் வழக்காளி - மனுதாரர் - வங்கியின் தத்துவக்காரரின் சத்தியக் கடதாசி ஆகியவற்றை வாசித்த பின்னரும் சட்டத்தரணிகளும் பிரசித்த நொத்தாரிசுகளுமான திருவாளர்கள் முருகேசு இன் அனுசரணையுடன் ஆஜராகிய சட்டத்தரணிகள் திருவாளர்கள் எஸ். சிவராசா, ஏ. ஆர். சுரேந்திரன் அவர்கள் கேட்டுக்கொண்டதன்படியும் இவ்விண்ணப்பம் பற்றிய அறிவித்தல் உங்களிற்கு கொடுக்கப்பட்டும் சேர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் இந்நீதிமன்றம் கட்டளையிடுகின்றது.

ஆகவே இவ்விண்ணப்பம் கொழும்பு ஹல்ஸ்டப்பிலுள்ள இந் நீதிமன்றத்தினல் 1988 ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு அல்லது இந் நீதிமன்றத்திற்கு வசதியான இன்னேர் நாளில் விசாரிக்கப்படும் எனும் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். அத்துடன் இவ் விண்ணப்பம் ஏன் ஏற்றுக் கொள்ளப் படக் கூடாது என்பதற்கான ஏதேனும் காரணம் இருப்பின் அதனையும் தெரிவிக்கும்படி இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்.

இவ் விண்ணப்பத்தின் பிரதிகள், அத்துடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், வழக்காளி, — மனுதாரர் — வங்கியின் தத்துவக்காரரின் சத்தியக்கடதாசி என்பவற்றின் பிரதிகளை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதிவகத்தில் அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கொழும்பு — 1, யோக் வீதி, கேமாஸ் கட்டடம் 3ஆம் மாடியில் உள்ள திருவாளர்கள் முருகேசு (வழக்காளி-மனுதாரர்-வங்கியின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிகள்) அவர்களிடம் இருந்து கட்டணம் இன்றிப் பெற்றுக் கொள்ளலாம்

நீதிமன்றக்கட்டளைப்படி
பதிவாளர்

1988 ஆம் ஆண்டு யூன் மாதம் 8 ஆம் தி தி.

## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



**Fளொறிஸ்ரா (ஷாலினி)**

கிளிநொச்சி திருநகர் இல. 132ஐச் சேர்ந்த கமலேந்திரன் - புஸ்பமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி

**Fளொறிஸ்ரா (ஷாலினி) 28-6-88 இன்று முதலாவது பிறந்த நாளை**

தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றுர்.

இவரை அப்பா, அம்மா, தொட்டப்பா, தொட்டம்மா, மற்றும் உற்றுர், உறவினர்கள், நண்பர்கள் கல்வியில் கலைமகளாய், செல்வத்தில் செல்வமகளாய், பொறுமையில் பொக்கிஷமாய், குணத்தில் குலமகளாய் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றுர்கள்.

(4529)

## முதலாவது நினைவுதினம்

அமரர்
திரு. வெங்கையா மகாலிங்கம்
அவர்கள்

தோற்றம்: 03- 12- 1944
மறைவு: 10- 06- 1987
திதி: 28- 06- 1988

அன்பர்களே!

டீ அமரரை நினைவுகூரும் முகமாக ஊரியவத்தை ஸ்ரீ காளியம்பாள் தேவஸ்தானத்தில் புதிதாக அமைக்கப் பெற்ற தண்ணீர்த்தொட்டி திறப்பு விழாவும், விசேஷபூசையும், அன்னதானமும் 28.06.88 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

இவ்வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உறவினர்கள், அன்பர்கள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றேம்.

மடத்தடி,
தெல்லிப்பளை.

இங்ஙனம்
வெங்கையா தனலட்சுமி
(தாயார்)
சகோதரர்கள்

(4760)


புதிய சேவை மீண்டும் ஆரம்பம்

## விநயகா ரேடிங் கொம்பனி

குவைத் வேலைவாய்ப்பு

கிளீனர்ஸ்
வயது எல்லை 20 — 40 35 KD
பணிப்பெண்கள்
வயது எல்லை 30 — 40 30 KD

**கல்ப் விங்ஸ்**
23, அலோய் அவென்யு,
கொழும்பு—3.

எமது வடமாகாண முகவர்
**V. T. R. ரவல்ஸ்**
இல. 41 3-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(4822)


## ஓராண்டு நினைவு அஞ்சலி



**சின்னத்தம்பி இராஜேந்திரம்**

மலர்வு: 19. 4. 1920
நிறைவு: 28. 6. 1987

எமது அன்பு டடா! அன்பாலும்; பண்பாலும், பாசத்தாலும் நல் வழி காட்டி, எவ்வித துன்பங்களும் எம்மை அணுகாமல் வாழவைத்த எங்கள் அன்பு டடா! பெருவிருட்சமாக இருந்து சரிந்து இன்றுடன் ஒரு வருடமாகிவிட்டது. ஆயினும் உங்கள் நினைவு எம்மை விட்டு அகலவில்லை. உங்கள் இனிய முகம் எங்கள் உள்ளத்தில் நிழலாகத் தெரிகின்றது. உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றேம்.

உங்கள் பிரிவால் துயருறும்

''இராஜஸ்தான்''
சின்னத்தம்பி அவனியூ,
மானிப்பாய்.

மனைவி, மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்

(4561)



அற்புதங்கள் நிகழும்

புங்குடுதீவு

அருள்மிகு அந்தோனியார் ஆலய

## வருடாந்த உயர் திருவிழா

**01-07-88 வெள்ளி பிற்பகல் 4-30 மணி**
**கொடியேற்றம்**

குழந்தைகளுக்கான - வழிபாடு
திருப்பலிப்பூசை

**02-07-88 சனி பி. ப. 5-30 மணி**
நோயாளிகள் — சிறைப்பட்டோருக்கான வழிபாடு
திருப்பலி நற்கருணை ஆராதனை

**03-07-88 ஞாயிறு காலை 8-00 மணி**

- ✶ திருவிழாப் பூசைப்பலி நற்கருணைப் பந்தி
- ✶ அருள்மிகு அந்தோனியார் தேர்ப்பவனி
- ✶ பக்தர்களுக்கு அருளாசி

திருவிழாக் குருக்கள்
**தவத்திரு ரீ. யேசுதாசன் (சந்திரன்) அடிகள்**

''வெள்ளை மலர்களோடு உள்ளங்களையும் பரமனுக்குக் காணிக்கையாக்குங்கள்! மருள் நீங்கி அருள்பெற விழாவில் கூடிப் பிரார்த்தியுங்கள்.''

யாத்திரிகர்களுக்கு ஏற்ற வசதிகள் உண்டு.

**எஸ். வி. முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

**மில்க் வைற் சோப்**
தொழிற்சாலை
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ**
(புடவை மாளிகை)
79, கே. கே. எஸ் வீதி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொய்யாமொழி

**குறள்:**

போற்றின் அரியவை போற்றல் ; டுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது.

**பொருள்:**

(அரசரைச் சார்ந்தவர்) தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினால், அரிய தவறுகள் நேராமல் காத்துக் கொள்ள வேண்டும்; ஐயுற்ற பின்னர் அரசரைத் தெளிவித்தல் எவர்க்கும் முடியாது.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805, 22073
யாழ்ப்பாணம்.
28-06-1988 — த. பெ. இல. 23


## மூடுவிழா வேண்டாம்!

யாழ்ப்பாணம் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் போதனாசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. அதனால் அது மூடப்படும் அபாய நிலை உருவாகி வருகிறது. இது குறித்து உரிய மேலிடத்திற்கு அறிவித்தும் போதனாசிரியர்களை நியமிக்கவோ பயிற்றுவிக்கவோ நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் உள்ள தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் மட்டுமே தமிழ் மொழி மூலம் போதனைகள் நடைபெறுகின்றன. நாட்டின்ஏனைய தாதிகள் பயிற்சிக் கல்லூரிகளில் சிங்கள மொழி மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் போதனாசிரியர்கள் ஆவதற்கு விசேட பயிற்சி அவசியம். அந்த விசேட பயிற்சி களுத்துறையில் உள்ள பயிற்சிக் கல்லூரியில் மட்டுமே வழங்கப்படுகிறது.

1983 ஆம் ஆண்டிற்குப் பின்னர் களுத்துறை சென்று போதனாசிரியர் விசேட பயிற்சி பெறும் தமிழர்கள் எண்ணிக்கை குறைந்தது. அதனாலேயே தமிழ் மொழி மூலம் பயிற்றுவிக்கக் கூடிய போதனாசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும் நிலைமை உருவாகி வந்தது.

வடபகுதியில் உள்ள ஆதார, மற்றும் கிராமப்புற ஆஸ்பத்திரிகளில் ஏற்கனவே பயிற்சி பெற்ற தாதியருக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. தாதியருக்குப் பயிற்சி அளிப்பதற்கு என்று வடபகுதியில் இருப்பது யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலை ஒன்று மட்டுமே.

நடந்து வரும் வன்செயல்களால் ஆஸ்பத்திரிகளின் சேவை முன்னரை விட அதிகம் தேவைப்படும் காலம் இது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் ஆஸ்பத்திரிகளுக்கு மேலதிக சேவைப் பளு அதிகரித்து வருவதும் கண்கூடு.

இத்தகைய ஓர் இக்கட்டான சூழ்நிலையில், தமிழ்ப் பகுதிகளில் வைத்திய சேவை புரிவோருக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. டாக்டர்கள் முதற்கொண்டு வைத்திய தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள் உட்பட தாதிகள் வரைக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

முன்கண்ட பதவிகளை வகிப்பதற்குத் தக்க பயிற்சி அவசியம். மக்களின் உடல் உயிரோடு சம்பந்தப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டும். ஆகையால் பயிற்சி இல்லாதவர்கள் அவற்றைக் கையாள முடியாது: பணியாற்ற முடியாது.

டாக்டர்கள் பற்றாக்குறையை நீக்க இப்போது தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் வெளிநாட்டு டாக்டர்களைத் தருவிக்கும் பரிதாப நிலை தோன்றியுள்ளது.

தாதிகள் பயிற்சிக் கல்லூரி மூடப்படும் நிலை உருவானால் தாதியரையும் அவ்வாறே தருவிக்கும் வெட்கக் கேடான நிலை உருவாகலாம்.

தாதிகளாகப் பயிற்சி பெற்றும் பணிபுரியக் கூடிய ஆயிரக்கணக்கான யுவதிகளும் இளைஞர்களும் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும்போது, பயிற்சி அளிக்கப் போதனாசிரியர்கள் இல்லை, பயிற்சிப் பாடசாலை இல்லை என்பதால் வெளிநாட்டுத் தாதியரைத் தருவிக்கும் நிலை உருவாக இடம் கொடுப்பின் அது கண்டிக்கப்படவேண்டியதாகும்.

வெளிநாட்டுத் தாதியரைத் தருவிக்கும் நிலை உருவாகாமல் தடுப்பதற்கு யாழ். தாதியர் பயிற்சிப் பாடசாலை தொடர்ந்து இயங்க வேண்டும். அங்குள்ள போதனாசிரியர் பற்றாக்குறை தீர்க்கப்பட வேண்டும். போதனாசிரியர் பற்றாக்குறையைத் தீர்க்க, உடனடியாக ஒரு மார்க்கம் கண்டறியப்பட வேண்டும். வெளிநாடுகளுக்கு அனுப்பியாவது போதனாசிரியர்களைப் பயிற்றுவிக்க ஒழுங்கு செய்தல் அவசியம்.

## வவுனியாவில் ஒருவர் வாள்வெட்டுக்குப் பலி!
### ஹோட்டல் ஒன்று சேதம்

வவுனியா ஜூன் 28

சனிக்கிழமை இரவு 7.30 மணி அளவில் ஹொரவப்பத்தானை வீதி தபால் பெட்டிச் சந்தியில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தில் ஒருவர் வாளால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

இங்கு உள்ள ஹோட்டல் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டு பலரும் தாக்குதல்களுக்கு உள்ளானார்கள்.

நவீனரக ஆயுதங்கள், நீண்ட வாள்கள் சகிதம் வந்த சுமார் 20 பேரடங்கிய கோஷ்டி ஒன்றே இதனைச் செய்தது என்று கூறப்படுகிறது.

இதே வேளையில் பட்டாணிச்சி புளியங்குளம் பகுதியில் பணம் வசூலுக்காக கிராமவாசிகளின் வீடுகளுக்குச் சென்ற இருவர் மற்றொரு கோஷ்டியினரால் பிடித்துச் செல்லப்பட்டனர் (இ-164)

சோவியத் யூனியன்:

# கம்யூனிஸ்ட் கட்சி சிறப்புமாநாடு இன்று ஆரம்பமாகிறது!

## கோர்பச்சேவ் தலைமைக்குச் சவாலாக இருக்குமா?

மாஸ்கோ, ஜூன் 28

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 19 ஆவது மாநாடு இன்று ஆரம்பமாகிறது.

கிரெம்ளின் மாளிகையில் நடைபெறவிருக்கும் இம்மாநாட்டில் ஐயாயிரத்துக்கு அதிகமான கட்சிப் பிரதிநிதிகள் பங்குபற்றுகின்றனர்.

1941 ஆம் ஆண்டுக்கு பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் விசேட மாநாடு ஒன்று அவசரமாக நடத்தப்படுவது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்படுகிறது.

தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தக் கொள்கைகள் பற்றி இம்மாநாட்டில் விரிவாக ஆராயப்படவிருக்கிறது.

இம்மாநாட்டு நிகழ்ச்சிகளை டெலிவிஷன்படம் பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடின்றி மாநாட்டுச் செய்திகளைப் பிரசுரிக்க செய்தியாளர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

சோவியத், வெளிநாட்டுச் செய்தியாளர்களுக்கு என்று தனி செய்தி நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநாடு பற்றிய செய்திகள் சோவியத் மக்கள் மத்தியில் அரசியல்விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி இருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் இரண்டு கோடி உறுப்பினர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ)

## அரசுப்படைகள் மீட்பு

அடிஸ் அபா ஜூன் 26

கெரில்லாக்களின் பிடியில் இருந்த சிறு பிரதேச பட்டினம் ஒன்றை அரசுப் படைகள் மீட்டு விட்டன என்று எதியோப்பியா நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது:

நாட்டின் வடபகுதியான எரித்திரியாவில் தனிநாடு கோரி, எரித்திரிய விடுதலை முன்னணி கெரில்லாக்கள் போராடி வருகின்றனர் என்பது தெரிந்ததே. (எ)

## லாவோஸில் தேர்தல்

பதின்மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் தடவையாக லாவோஸ் நாட்டில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்றது.

சுமார் பத்துலட்சம் வாக்காளர் வாக்களிக்கும் தகுதி பெற்று இருந்தனர்.

லாவோஸ், கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ் 1975 இல் வந்தது. லாவோஸுக்கு என்று நாடாளுமன்றமும் இல்லை; அரசமைப்புச் சட்டமும் இல்லை.

## ''பலஸ்தீனத்தின் தலைநகர் ஜெருசலமே''

ஜெருசலம், ஜூன் 27

ஜெருசலம் நகரை இஸ்ரேவலுடன் இணைத்து இன்றுடன் 21 ஆண்டுகள் பூர்த்தி அடைந்துள்ளது.

இதை ஒட்டி பலஸ்தீனியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இஸ்ரவேல் இராணுவம் நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருந்தது. இதனிடையில், கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களான காஸா, மேற்குக் கரைப் பகுதிகளில் சுவரொட்டிகளை ஒட்டுவதில் பலஸ்தீனியர் ஈடுபட்டு இருந்தனர்.

''பலஸ்தீனத்தின் தலைநகரம் ஜெரூசலம் தான்'' என்று சுவரொட்டிகளில் எழுதப்பட்டு இருந்தன. (எ)

### வெளி உலகில்

## வளைகுடா யுத்தத்தில் ஈராக் முன்னேற்றம்?

பஹ்ரைன் ஜூன் 27

வளைகுடா யுத்தத்தில் நான்கு ஆண்டுகளுக்கு முன் இழந்த பிரதேசத்தை ஈராக் கைப்பற்றி விட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஈராக் அதிபர் சதாம் ஹுசேன் நேற்று மீட்கப்பட்ட பிரதேசத்தைச் சென்று பார்வையிட்டார்.

பலத்த தாக்குதலின் பின்னரே இப்பிரதேசம் மீட்கப்பட்டதாக ஈராக் அறிவித்தது.

ஈராக் படைகள் இரசாயன ஆயுதங்களைப் பாவித்ததினால் தான் தனது படைகள் பின்வாங்க நேரிட்டதாக ஈரான் அறிவித்தது.

மத்திய கிழக்கிலுள்ள பிபிசி செய்தியாளரின் தகவலின் படிஈரான் படைகள் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்என்றும், இராஜதந்திர, பொருளாதார, இராணுவ ரீதியில் முன்னேறிச் செல்ல முடியாத நிலையில் ஈரான் உள்ளது என்று அறிவிக்கப்படுகின்றது. (எ)

# கனடா சோவியத் ராஜதந்திர நெருக்கடி தீவிரமடைகிறது

5 கனடிய ராஜதந்திரிகளை சோவியத் யூனியன் நேற்று வெளியேற்றியது

இரண்டு நாடுகளுக்கும் இடையேயான ராஜதந்திர நெருக்கடி மேலும் தீவிரமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

பத்து நாட்களுக்கு முன்னர் கனடா 17 சோவியத் ராஜதந்திரிகளை உளவு பார்த்த குற்றச் சாட்டின் மீது வெளியேற்றியது.

அதைத்தொடர்ந்து இரண்டு நாடுகளும்பரஸ்பரம் ராஜதந்திரிகளை வெளியேற்றத் தொடங்கியது. (எ)

## பதவி நீக்கம்

சென்னை, ஜூன் 26

தமிழக முன்னேற்ற முன்னணியில் இருந்து திரு எம். பி. சுப்பிரமணியம் விலக்கப்பட்டு விட்டதாக அதன் தலைவர் சிவாஜி கணேசன் அறிவித்தார்.

முன்னணியின் செயல் தலைவராக திரு சுப்பிரமணியம் பணிபுரிந்து வந்தார். (ஒ-எ)

## நமீபியா சுதந்திரம்; பேச்சில் முன்னேற்றம்

நமீபியாசுதந்திரம்பற்றிய அடுத்த கட்டப்பேச்சுக்களை அமெரிக்காவில் நடத்துவது என்று கெய்ரோவில் நடந்த நான்கு நாடுகள் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

அங்கோலாவில்இருந்து கியூபா துருப்புக்களை விலக்குவது தென் ஆபிரிக்க அரசுத்துருப்புக்கள் விலக்கப்பட்டு நமீபியாவுக்குச் சுதந்திரம் வழங்குவது ஆகியவிடயங்கள் இம்மாநாட்டில்ஆராயப்பட்டன:

இரண்டாம் நாள் பேச்சுக்களில் முன்னேற்றம் காணப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது

அதைத் தொடர்ந்தே ஐ. நா தலைமைக் காரியாலயத்தில் கூடி மீண்டும் பேச்சுக்களை நடத்துவது என்று மாநாட்டில் கலந்து கொண்டதென் ஆபிரிக்கா, கியூபா அமெரிக்கா அங்கோலா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் முடிவுசெய்தனர் என்று அறிவிக்கப்பட்டது (எ)

# மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் அமைதி

மட்டக்களப்பு, ஜூன்.28

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்டங்களில் அண்மைக்காலங்களாக பூரண அமைதி நிலவுகிறது.

இந்தியப்படை — தமிழீழ விடுதலைப்புலிகளுக்கிடையில் குறிப்பிடத்தக்க மோதல்கள் எதுவும் அண்மைக்காலங்களில் இடம்பெறவில்லை.

இந்தியப்படையினர் திடீர் ஊரடங்கு உத்தரவு பிறப்பித்து சில பகுதிகளில் தேடுதல் மேற்கொண்டுவருகிறார்கள்.

இதில் புலிகள் முக்கியஸ்தர்கள் சிக்கிக் கொண்டதாகவோ அல்லது ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவோ தகவல் இல்லை.

இந்தியப்படையினரும் முன்பு தமது சோதனை, தேடுதல் நடவடிக்கைகளில் கையாண்ட கெடுபிடிகள் தற்போது குறைந்து வருகின்றன.

இரவு 7 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்பட்டாலும் 9 மணிவரை மக்கள் நடமாட்டம் காணப்படுகிறது.

இயக்க மோதல்கள் நேரடியாக இடம்பெற்றதாக இல்லை.

ஆனால் இதன் எதிரொலியாக உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். மர்மமாக காணமல் போய்உள்ளார்கள்.

ரெலோ, ஈ. பி. ஆர். எல். எப். அமைப்புகள் நகரில் அலுவலகங்களை வைத்துள்ளன.

ஈரோஸ் அமைப்பு தனது அஹிம்சைப் போராட்டங்களை வெகுஜன போராட்டமாக நடத்திவருகின்றது.

இது இவ்வாறு இருக்க வீடுகளில் ஆயுத பாணிநபர்கள் மேற்கொள்ளும் கொள்ளைகள் காரணமாக பொதுமக்கள் மத்தியில் பயம், பீதி நிலவுகின்றன. (இ-21)

## பிதா அன்னதாஸ் ராஜினாமா

மட்டக்களப்பு ஜூன் 26

அக்கரைப்பற்று பிரசைகள் குழுவின் பிரதித் தலைவரான வண. பிதா அன்னதாஸ் தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

மேலிட உத்தரவின் பிரகாரம் இம் முடிவு எடுத்துள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

## கணக்காளர் பொதுக் கூட்டம்

வட்டுக்கோட்டை ஜூன் 28

இலங்கைக் கணக்காளர் சேவைச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் ஜூலை மாதம் கொழும்பில் நடைபெறும் என்று பொதுச் செயலாளர் திரு. கே. கே. தயாரத்தின சுற்றறிக்கை ஒன்றின் மூலம் அங்கத்தவர்களுக்கு அறிவித்துள்ளார்.

புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவும் இக் கூட்டத்திலேயே நடைபெறும்.

திரு. எஸ். எக்ஸ். குல சேகரம் மேற்படி தகவலை உதயனுக்குத் தெரிவித்தார். (இ-161)

வவுனியாவில்

## நகரக் காவலர்கள் கடமை புரியத் தடை

வவுனியா நகரில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவர்களை வியாழக்கிழமை முதல் கடமையில் ஈடுபடவேண்டாம் என்று ரெலோ இயக்கம் தடை விதித்துள்ளது.

கடந்தவாரம் கடை வீதியில் உள்ள கைட் ஒன்றில் இருந்து லட்சக் கணக்கான ரூபா பெறுமதியான ரொக்கம், தங்கநகை என்பன தெரியாமல் இருந்ததும்-

அதனைத் தடுக்க தவறியமைபோன்ற காரணங்களுக்காகவே நகரப் பாதுகாப்பு சேவையைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாக ரெலோ இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்,

இதேவேளையில் நகரப் பகுதியில் ரோந்து நடவடிக்கைகளைத் தீவிரப் படுத்துமாறு இந்திய அமைதிப்படையினருக்கு வேண்கோள் விடுத்ததைத் தொடர்ந்து படையினர் மேலதிகமாக சேவையில் ஈடுபட்டுள்ளதாகவும்,இரவு 9 மணியளவில் ஊரடங்கு வேளையில் கடைவீதியில் நடமாடிய இருவர் ... கைது செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-164)

## சுருவில் கடற்கரையில் காவல்தீவிரம்

ஊர்காவற்றுறை ஜூன் 28

தற்போது சுருவில் சந்தியில் முகாம் அமைத்துள்ள இந்திய அமைதிப்படையினர் அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் காவல் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இரவு பகலாக காவல் நிலையங்களை அமைத்தும் நடை பவனியாகவும் காவல் புரிந்துவரும் ... அமைத்துள்ளனர். (இ-16)

## அதிகாரிகள் குழு பாதிப்புக்களை பார்வையிட்டது

யாழ்ப்பாணம், ஜூன்28

அசம்பாவிதங்களினால் யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட சுகாதாரத் துறை சம்பந்தப்பட்ட பாதிப்புக்களைப்பார்வையிட அதிகாரிகள் குழுவொன்று யாழ். நகருக்கு விஜயம் மேற்கொண்டிருந்தது.

இந்தக் குழுவில் புனர்வாழ்வுஅமைச்சு அதிகாரிகள் இருவரும் சுவிஸ் அதிகாரிகள் ஐவரும் அடங்கியிருந்தனர்.

ஹெலிக்கொப்டர் மூலம் யாழ்ப்பாணம் வந்த இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் மார்பு நோய்ச் சிகிச்சைப்பகுதியையும்ஏனைய பல பகுதிகளையும் பார்வையிட்டதுடன், கோப்பாய், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளுக்கும் விஜயம் மேற்கொண்டனர். (ஒ-9)

## கும்பாபிஷேக வீடியோ படம்

பருத்தித்துறை ஜூன் 28

செங்கல்பட்டு ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் புதிய கோவில் கும்பாபிஷேக வீடியோ படம் நாளை 29ஆம் திகதி புதன் கிழமை போயாதினம் அன்று பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் மாலை 3 மணிக்கு காட்டப்படும். (இ)

## கூடத்து மனோன்மணிக்கு உற்சவ பூர்த்தி விழா

யாழ்ப்பாணம் ஜூன் 28

சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் வருடாந்த அலங்கார உற்சவ பூர்த்திவிழா, நாளை புதன்கிழமை மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளது.

நாளை காலை ஒன்பது மணி முதல் அம்பாளுக்கு விசேட சங்காபிஷேகமும், அதைத் தொடர்ந்து பூசைகளும், தீபாராதனைகளும் நடைபெறும்.

அன்று மாலை நான்கு மணிக்கு, மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் எழுந்தருளி அம்பாள் வீதி உலா வருவார். பிரபல நாதஸ்வர வித்வான் திரு: என்: கே: பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வர இசைக் கச்சேரி இடம்பெறும்:

மறுநாள் வியாழக்கிழமை பூங்காவனத் திருவிழா நடைபெறும். (அ)

## ஸ்ரீ வாராஹி அம்பாள் தேர்த்திருப்பணி

கொக்குவில் ஜூன் 28

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் கோவில் சித்திரத்தேர் திருப்பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றது.

அடியார்களின் நிதி உதவியுடன் கட்டப்பட்டு வரும் இந்தச் சித்திரத் தேர் அமைப்பதற்கு சுமார் மூன்றரை இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஸ்தபதி சிற்பகலாமணி ஆறுமுகம் ஜீவரத்தினம் சித்திரத்தேர் அமைப்பாளராவர். (இ-சி)

## புங்குடுதீவு அந்தோனியார் திருவிழா

யாழ்ப்பாணம், ஜூன் 28

புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

3 ஆம் திகதி காலை 8 மணிக்கு திருவிழா பூசைப்பலி: நற்கருணைப் பந்தியும் காலை 9 மணிக்கு அருள்மிகு அந்தோனியார் தேர்ப் பவனியும் காலை 10. 30 மணிக்கு பக்தர்களுக்கான அருளாசி வழங்குதலும் நடைபெறவுள்ளன. (இ-10)

## உதயநகர் முத்துமாரி அம்பாள்விழா

கிளிநொச்சி உதயநகர் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும் கரகத் திருவிழாவும் கடந்த22ஆம்திகதிஆரம்பமாகின.

நாளை 29 ஆம் திகதி பகல் உருத்திரா அபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னதானமும், அலங்கார ஊர்வலமும் இடம்பெறும்.

30 ஆம்திகதி அம்பாள் குளத்தில் தீர்த்தோற்சவ வைபவத்துடன் உற்சவம் முடிவடையும். (இ-76)

## கந்தவன ஆலய தேர்த்திருவிழா

திக்கம் ஜூன் 28

கந்தவன ஆலய வருடாந்த உற்சவத்தின் தேர்த்திருவிழா இன்று 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறும்.

நாளை 29 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (இ-சி)

## பாப்பரசருக்கு வேண்டுகோள்

இஸ்ரவேலை அங்கீகரிக்கும்படி பாப்பாண்டவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆஸ்திரியாவிற்கு விஜயம் செய்த சமயம் பாப்பாண்டவருக்கு யூதர்கள் இவ்வேண்டுகோளை விடுத்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A/L 89 வெப்ப இரசாயனம்

● பிரிவு: III ஆரம்பமாகிவிட்டது

Sat, Sun : 4. 00 p. m.

ஆசிரியர்:

திரு. நாகரெட்ணம்(B. sc.)

மணல்தரை லேன், கந்தர்மடம்.

# உதயன்

28 - 06 - 1988 செவ்வாய்க்கிழமை

AL 89 விஞ்ஞான மாணவர்கட்கு

வெப்ப இரசாயனம்

★ ஆரம்பமாகிவிட்டது ★

பிரிவு: I Sat, Sun 10-30 a m

பிரிவு: II ஆரம்பம்: 19-06-1988

Sat, Sun: 1-50-p.m.

3-ஆம் குறுக்குத் தெரு. — யாழ்ப்பாணம்

செஞ்சிலுவைச் சங்க உதவியுடன்

## யாழ்ப்பாணத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்.28 சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன் யாழ்ப்பாணத்தில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சுடன் இணைந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எடுத்து வருகிறது.

பரீட்சார்த்தமாக இரண்டு இடங்களில் அமைக்கப்படும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறம்பட இயங்கும் பட்சத்தில் தொடர்ந்தும் பல ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

வவுனியா மாவட்டத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக சுகாதாரத் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-10)

## முல்லைத்தீவில் கிராமங்களில் இருந்து வெளியேறும் மக்கள்!

யாழ்ப்பாணம் ஜூன் 28 முல்லைத்தீவின் பலபகுதிகளிலும் கிராம மக்கள் தமது இருப்பிடங்களை விட்டுவெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

இப்பகுதியில் இந்திய அமைதிப் படையினரின் தேடுதல் நடவடிக்கை அதிகரித்திருப்பதும் இந்தியப் படையினர் பெருமளவு குவிக்கப்பட்டு வருவதுமே மக்கள் வெளியேற்றத்துக்கு முக்கிய காரணங்களாகும்.

முல்லைத்தீவுக் கிராமப் புறங்களில் உள்ள மக்கள் முல்லைத்தீவு நகரம் கிளிநொச்சி வவுனியா ஆகிய பகுதிகளுக்கு இடம் பெயர்ந்துள்ளார்கள் (ஒ-10)

### வாரத்தில்..

வரையில் மரணமடைந்துவருவதும் பொலீஸ் பதிவுகளில் இருந்து தெரியவந்துள்ளது.

மினிபஸ் . வினாலும், பஸ்களினாலும், மோட்டார் சைக்கிள்களினாலுமே இவ்விதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று மட்டும் வீதி விபத்தில் சிக்கிய மூன்று பேர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-10)

அன்னை நாகபூஷணியின் அருள் வேண்டி நிற்கின்றோம்

சகல விதமான மலிபன்
பிஸ்கட் வகைகளும்
மலிபன் பானங்களும்
லிற்றில் லயன் பிஸ்கட், கேக்
ஹார்லிக்ஸ் வகைகளும் பெற்றுக்
கொள்ள இன்றே எமது ஸ்தாபனத்
திற்கு விஜயம் செய்யுங்கள்.

ஞானம்ஸ் டிரேடர்ஸ்

150, 152 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வேலை வாய்ப்பு

குவைத்

✶ எலெக்றிசன், மெக்கானிக் (பொது)
✶ கிளாக், கசியேர்ஸ்,
✶ ரைப்பிஸ்ற், வெல்டேஸ்
✶ செக்குறிற்றிக் காட்
✶ விடியோ ரெக்னிசன்
✶ பார் உதவியாளர்

உடன் காலையில் சந்திக்கவும்

சிவா மாஸ்ரர்

தொழில் ஆலோசகர்,
ஏழாலை.

(4769)

# ஜெயலலிதா அணிக்குள் கருத்து வேறுபாடுகள்

## அரசியல் விவகாரக் குழு கலைப்பு

சென்னை, ஜூன் 28 அ. இ. மு. க. ஜெயலலிதா அணியில் தலைவர்கள் மத்தியில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த அணியின் அரசியல் விவகாரக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

மூத்த தலைவர்களான இரா. நெடுஞ்செழியன், பண்ருட்டி இராமச்சந்திரன், எஸ். திருநாவுக்கரசு ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

ஏன் கலந்துகொள்ளவில்லை என்று விளக்கம் கேட்டு பொதுச் செயலாளரான ஜெயலலிதா இத் தலைவர்களுக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அவர்கள் கடிதங்களுக்குப் பதிலளிக்கவில்லை.

இந்த நிலையில் அவர்கள் அங்கம் வகிக்கும் அரசியல் விவகாரக் குழுவை, தான் கலைத்து விட்டதாக செல்வி ஜெயலலிதா நேற்று அறிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

முறைப்படியாக நிர்வாகிகள் தெரிவு செய்யாதபடியால் ஆலோசனை கூற தற்காலிகமாக இந்த அரசியல் விவகாரக்குழு நியமிக்கப்பட்டது.

'இப்போது முறைப்படி நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுவிட்டனர் எனவே இந்த அரசியல் விவகாரக்குழு இயங்க வேண்டிய தேவை இனி இல்லை'—

இப்படி ஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார். (ஒ-எ)

## இளம்பெண் சுட்டுக் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 28 விசாரணைக்கு என அழைத்துச் செல்லப்பட்ட இளம்பெண் ஒருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

இனந்தெரியாதவர்களினால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவம் நேற்றுமுன்தினம் பண்டத்தரிப்பில் வடலியடைப்பு என்ற இடத்தில் நடைபெற்றது.

நளாயினி . சபை (வயது 16) என்ற இளம் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவர்,

இவரது மரணம் தொடர்பான விசாரணையை யாழ் மேலதிக நீதிவான் திரு. வ. சிதம்பரநாதன் யாழ் ஆஸ்பத்திரியில் நடத்தினார். (ஒ-10)

## தமிழ் வியாபாரிகள் எதிர்ப்பு

திருகோணமலை, ஜூன்28 கனகம்மில் மார்க்கற்சந்தையிலுள்ள தமிழ் வியாபாரிகள் மணிக்கூட்டுக் கோபுரத்தடியில் அமைந்துள்ள சந்தைக் கட்டடத்திற்கு மாறுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அங்கு சென்றால் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்திய அமைதிப் படை அங்குஉள்ளதால் தற்சமயம் பாதுகாப்பாக உள்ளது.

அவர்கள் சென்ற பின்னர் தமிழர்களுக்கு பாதுகாப்பு இருக்காது என்ற காரணத்தைக்காட்டியே அங்கு போக மறுக்கின்றனர். எனினும் அங்கு திருத்த வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன. (ஒ-150)

## புதியபயிற்சி நெறி தொழில்நுட்பக் கல்லூரியில்

யாழ்ப்பாணம் ஜூன் 28 தேசிய தராதரப் பத்திர கணக்கியல் என்ற புதிய பயிற்சி நெறிஒன்று யாழ் தொழில் நுட்பக் கல்லூரியில் அக்டோபர் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

இப்பயிற்சி பகுதி நேரமாக மாலை நேரத்தில் இரண்டு வருடங்களுக்கு நடக்கப்படும்.

ஜீ. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் கணிதம் உட்பட ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்போர் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சி நெறி ஏ. ஏ. ரி. (A. A. T.) பாடத்திட்டத்தை பூரணமாக உள்ளடக்கியுள்ளது மேலும் விவரம் அறிய விரும்புவோர் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி அதிபருடன் தொடர்பு கொண்டு பெறலாம்.

இப்பயிற்சிநெறிக்கான விண்ணப்ப முடிவு திகதி ஜூலை மாதம் 15-ஆம் திகதி என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

## சுட்டுக் கொலை

காரைநகர் சடையாளிப்பகுதியில் அன்ரன் என்பவர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரின் சொந்த இடம் மீசாலை ஆகும் (இ-73)

தவறிவிட்டது

26- 6- 1988 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பின் யாழ்ப்பாணமிருந்து குறிகாட்டுவான் சென்ற 29 சிறி 2236 இலக்க மினிபஸ்சில் மண்கும்பானுக்கும் குறிகாட்டுவானுக்குமிடையில் பணப்பை ஒன்று தவறிவிட்டது. அதனுள் நயினாதீவு நாகம்மாளுக்குரிய காணிக்கைப் பணமும், நகைகளும் அடங்கியிருந்தன. கண்டெடுத்தவர்கள் கருணைகூர்ந்து அதனை நயினை நாகபூஷணி அம்மன் அலுவலகத்திலோ அல்லது உதயன் காரியாலயத்திலோ ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(4578)

திருமலை மாவட்டத்தில்

# மறியல், கையெழுத்து போராட்டம்

## ஈரோஸ் நடத்துகிறது

திருகோணமலை ஜூன் 28 நிபந்தனையற்ற யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை தமிழ்பறிபோகின்ற பாரம்பரிய பிரதேசங்களை மீட்டல், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தல் ஆகிய நான்கு கோரிக்கைகளையும் முன்வைத்து ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) திருகோணமலை மாவட்டத்தில் பரந்த அளவிலான வீதி மறிப்புப் போராட்டங்களையும் கையெழுத்துப் போராட்டத்தையும் நடத்திவருகிறது

மூதூர் நகரில் இடம்பெற்ற ஈரோஸின் மறியல் போராட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர் கிராமப்புறங்களிலிருந்து மக்கள் மூதூர் நகருக்குச் சென்று மறியல்போராட்டத்தில் கலந்துகொண்டனர்

மூதூர் நவரத்தின மண்டபம் முன்பாகவும் அரசினர் மருத்துவமனை முன்பாகவும் மறியல் போராட்டம் இடம்பெற்றது

### திருமலையில்

திருகோணமலை திருஞானசம்பந்தர் வீதியில் அரசடிச் சந்தியில் வீதியின் குறுக்கே அமர்ந்திருந்து மறியல் போராட்டம் நடத்தப்பட்டது

பாடசாலை மாணவ மாணவிகள் உட்பட பெருந்திரளான மக்கள் சுலோக அட்டைகள் தாங்கியவண்ணம் மறியலில் ஈடுபட்டனர்

காலை 8மணிக்கு ஆரம்பமான மறியல் போராட்டம் காலை 10 மணியுடன் முடிவுற்றது

யுத்த நிறுத்தம் பேச்சுவார்த்தை சமாதானம் ஆகியவற்றை வலியுறுத்தியே இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றது

இரண்டு மணித்தியாலம் திருஞானசம்பந்தர் வீதியால் எதுவிதமான வாகனப் போக்குவரத்துகளும் இடம்பெறவில்லை

இவ்வீதியிலுள்ளகடைகள் மூடப்பட்டிருந்தன

கனகம் மில் சந்தை இயங்கவில்லை பாடசாலைகளுக்கு மாணவர்கள் அதிகளவு செல்லவில்லை இந்திய அமைதிப் படையினர் இப்பகுதியில் அதிகளவு காணப்பட்டனர்

மகஜர் ஒன்றும் ஈரோஸ் இயக்கத்தால் இந்திய அமைதிப் படையினரிடம் கையளிக்கப்பட்டது (ஒ-150)

### நயினை....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கப்படுகிறது.

குறிகட்டுவான் நயினாதீவுக்கிடையிலான படகுச் சேவைகள் தாமதமின்றி நடைபெற துறைமுகங்களில் தங்கியிருக்கும் அமைதிப்படையினர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

நெடுந்தீவு, அனலைதீவு, புங்குடுதீவு ஆகிய இடங்களில் இருந்து செல்லும் பக்தர்கள் இன்று அதிகாலையில் வந்து சேர்வார்கள் எனத் தெரிகிறது. நெடுந்தீவுப் பயணிகள் படகு இன்று அங்குள்ள மக்களின் வசதியைக் கருதி நயினாதீவுத் துறைமுகத்தில் தரித்துச் செல்லும்.

யாத்திரிகர்கள் தங்களது பொருள்களிலும் குழந்தைகளிலும் கவனமாக இருக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அறங்காவல் சபையினரும், தொண்டர்களும் மக்களுக்கு கஷ்டம் ஏற்படாத வகையில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அனைத்து யாத்திரிகர்களின் ஒத்துழைப்புக்களையும் கோரியுள்ளனர்.

யாத்திரிகர்களின் வசதியை முன்னிட்டு 'அமுதசுரபி' அன்னதானசபை சிறப்பான பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது யாத்திரிகர்கள் மீண்டும் தமது இடங்களுக்குச் செல்லக்கூடியதாக பிற்பகல் 5 மணிவரை படகுச்சேவைகள் இடம் பெறும். (அ-111)

### முல்லைத்தீவு....

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

யுத்த நடவடிக்கைகளையே சந்தித்து வந்துள்ள ஈழத் தமிழினம் தொடர்ந்தும் இந்திய அமைதிப் படையினரின் யுத்த நடவடிக்கைகளையே சந்திக்கவேண்டி உள்ளது. அதனால் அலுத்து, மனம் சோர்ந்துள்ளோம்.

ஆகவே உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி தமிழினத்திற்கு அமைதியான நல்லதோர் வாழ்க்கையை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்

★ தென்னமரவாடி, கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய், நாயாறு ஆகிய இடங்களில் காலங்காலமாகவாழ்ந்துவந்த தமிழ் மக்கள் கடந்த 1981 இல் அங்கிருந்து களாக்கப்பட்டு, தமது சொந்தக் கிராமங்களை விட்டு வெளியேறி முல்லைத்தீவு, முள்ளியவளை தண்ணீரூற்று குமுழமுனை ஆகிய இடங்களில் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களின் பாரம்பரிய நிலங்களில் வெலிஓயா என்ற திட்டத்தின் கீழ் திட்டமிட்டுச் சிங்களமக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அந்த நிலங்களின் பூர்வீகக்குடிகளை மீளக் குடியமர்த்துவதற்கு எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை

ஆகவே சிங்களக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதுடன் அதில் ஏற்கனவே குடியேற்றப்பட்டவர்களைத் திருப்பி அனுப்பி அதன் பூர்வீகக் குடிகளைத் தங்கள் சொந்த நிலங்களில் குடியமர்த்தவும் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்

★ ஏறக்குறையப்பத்து ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்தாலும் தற்போது இந்திய அமைதிப் படையினராலும் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகிறார்கள் எத்தனையோ இளைஞர்கள் விசாரணைகள் எதுவுமின்றி தொடர்ந்தும் சிறையிலேயே வாடுகின்றனர் ஆகவே அவர்கள் அனைவரையும் பாரபட்சமின்றி விடுதலைசெய்யும்படி கேட்டுக் கொள்கிறோம்

உண்ணாவிரத முடிவில் உரையாற்றிய முல்லைத்தீவு அன்னையர் முன்னணித் தலைவி திருமதி கு. மார்த்தம்மா யுத்தத்தை நிறுத்திப்போராளிகளுடன் பேசி தமிழர்களின் சகல பிரச்சினைகளையும் தீர்த்து வைக்குமாறு இந்திய அரசுக்குத் [illegible] (அ)

### தொழிற்சங்க....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

என்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பில் அவரின் வீட்டிற்கு அருகில் அவர் கத்திக் குத்துக் காயங்களுடன் விழுந்து கிடந்தார்.

கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அவருக்கு மரணம் சம்பவித்தது.

கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிற்பீரோ உறுப்பினராக இரு: பண்டித்த பணியாற்றி வந்தார்! (ஒ-எ)

## மரண அறிவித்தல்கள்

### திரு. நல்லையா சாமுவேல் கருணைராஜா

இருபாலை கிழக்கைச் சேர்ந்த திரு. N. S. கருணைராஜா காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற திரு. திருமதி T. S. நல்லையாவின்புதல்வரும், றூத்தின் அன்புக்கணவரும், செல்வி, மோகன், றஞ்சோ, றேஹான் அவர்களின் அன்புத்தந்தையாரும், சந்திரகுமார், றஞ்சிற் சின்னையா, றஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷிவேந்திரன், தர்ஷனா, ஜிற்றே, ஷெகான் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற அருட்திரு. திருமதி முத்துவேலு ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற L. W. D. நல்லையா அவர்களின் அன்புச் சகோதரரும், ஞானி நல்லையா, ஜொய்ஸ் நவரட்ணராஜா, சோதி தேவேந்திரராஜா ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் அடக்க ஆராதனை அவரது இல்லத்தில் 29-6-88 புதன் கிழமை காலை 8 மணிக்கு நடைபெற்று கோப்பாய் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்,

திருமதி றூத் கருணைராஜா
இருபாலை கிழக்கு
கோப்பாய்.

4576

### வி. வீ. கே. ஆறுமுகம்

அன்புக்கடல், திருப்பூங்குடி வில்லுப்பாட்டு வி. வீ. கே. ஆறுமுகம் லண்டனில் காலமானார். இவர் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும் இலங்கையின் முன்னணிச் சமயப் பிரசாரகரும் வல்லை வைத்தீஸ்வரன் கோயில் ஆஸ்தான வித்துவானுமாவார். இவர் காலஞ்சென்ற புங்குடுதீவு கந்தப்பு அன்னப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமாரசுவாமி - சின்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், வான்மதி (அமெரிக்கா), தவமதி (லண்டன்), மதிமோகன், மதிஸ்வரன், சிவமதி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரத்தினபுரி கனகரெத்தினம், காக்கா போட் வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், மங்கையர்க்கரசி, காலஞ்சென்ற சண்முகராசா (C. T. B. மன்னார்) டாக்டர் சண்முகரெத்தினம் (புத்தளம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பொறியியலாளர் முத்துலிங்கம் (அமெரிக்கா), விக்னேஸ்வரன்- சொலிசிஸ்ரர் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனும், ஜேர்மனி மாணிக்கவாசகரின் சகலனும், தர்சனா, தர்சன், அனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். இல. 12/1 கன்னாதிட்டி அனைரதுஇல்லத்தில் 28-6-1988 செவ்வாய்க்கிழமை துக்கம் அனுட்டிக்கப்படும்.

திருமதி மங்கையர்க்கரசி
மாணிக்கவாசகர்

(4577)

இப்பத்திரிகை நியு உதயன் பப்ளிகேஷன்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 28 - 06 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications [Private] Limited 292/2 Navalar Road Jaffna Tuesday 28th June 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

## நின்னருள் வேண்டுகின்றோம்!

நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே;
பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரும் மதலையரும்,
அன்னநல் அணிவயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்,
இன்னவை காத்திடவே - அன்னை
இணைமலர்த்திருவடி துணைபுகுந்தோம்.

— பாரதியார் —

* * * *

## நலன்செய் தாயே நாகேஸ்வரி!

சங்கும் முத்தும் அலைகடலின்
சதுரங்கத்தில் கரை தழுவும்
தெங்கும் வாழை கமுகுகளும்
சேரும் நறுமணப் பூங்காற்றும்
எங்கும் இறைவின் புகழ் சாற்றும்
எழில்சூழ் மாண்பு மணித்தீவில்
செங்கோல் கொண்ட சயற்கண்ணி
செகத்தைக் காக்கும் முதற்பெண் நீ!

ஆழிசூழ் மணி பல்லவத்தில்
அமர்ந்தருள் பாலிக்கும் தேவி
ஏழு திலக மக்களதும்
எழில்சேர் வாழ்வும் உன்னதுவே!
பாழும் அரக்கர் வதமழித்துப்
பாவை ரதத்தில் வலம்வருவாய்!
நாளும் நின்னைத் தொழுகுவர்தம்
நலன்செய் தாயே நாகேஸ்வரி!

கையில் இல்லார், உள்ளோர்கள்
கலங்கி நிற்போர், துயருற்றோர்
பொய்யே உலக மெனிமித்தப்
பிரபஞ்சத்து முனிவோர்கள்
மைபல் கொண்டு தினமுன்னை
மலரார்ச்சனை செய் மற்றோர்க்கும்
தையல் நயினைத் தாய்நீயே
தருவாய் அருள்வாய் நல்வினைகள்!

—நெடுந்திவு லக்ஸ்மன்—

* * * *

## நாகையம் பதியாய் போற்றி!

நாகையம் பதியாய் போற்றி
நற்றமிழ்ச் சுவையே போற்றி
ஓகையம் பொருளாய் போற்றி
ஒருமையின் திருவாய் போற்றி
ஈகையம் சுரத்தாய் போற்றி
இணையிலா இறைவி போற்றி
நாகையம் தலத்தாய் போற்றி
நலமெலா மளிப்பாய் போற்றி

வந்தனைக் குரியாய் போற்றி
வழித்துணை ஆவாய் போற்றி
சிந்தனைக் கரியாய் போற்றி
சிறுப்பினை எரிப்பாய் போற்றி
சுந்தனைப் பயந்தாய் போற்றி
கருணையின் ஒளியாய் போற்றி
பந்தனை அறுப்பாய் போற்றி
பவவினை ஒழிப்பாய் போற்றி

பண்மிசை ஒலியாய் போற்றி
பைந்தமிழ்ப் பொருளே போற்றி
விண்மிசை ஒளியாய் போற்றி
விசையினைத் தருவாய் போற்றி
மண்மிசை அருள்வாய் போற்றி
மரகத வடிவாய் போற்றி
கண்மிசை நிறைவாய் போற்றி
கருணையின் விளக்காய் போற்றி

—ஆழ்கடலான்—

* * * *

## பக்தரைக் காத்திடம்மா!

சூரனை அழித்துத் தேவர்
துயர்தனைப் போக்க வீர
வேலனைத் தந்தாய் விந்தைப்
பாலகன் சம்பந் தர்க்குப்
பாலொடு ஞானம் தந்தாய்!
நீசர்கள் இன்று செய்யும்
நாசங்கள் கண்டு சும்மா
நாயகி பார்த்து நிற்றல்
ஞாயமோ நயினைத் தாயே!
வீறுகொண் டெழுந்து நில்லு!
வீணரை வெட்டி வீழ்த்து!
காளியாய் உருவு கொண்டு
காரியம் முடித்துக் காட்டு!
பாடியுன் பாதம் போற்றும்
பக்தர்க்குன் பரிவு காட்டு!

—வ. யோகானந்தசிவம்—

# சர்வமத சந்நிதியாக திகழும் நயினைப்பதி

அழியாத நன்வினையாய் விளங்குபவள் நாகபூஷணித்தாய். வித்தின் நிவினை முளமாக ஒளிர்கிறப்பவள்; அழகும் அருளும் ஒவ்வாத வல்லியென மிளிர்பவள்.

அலைகடலாணையைத் தன்னகத்தே கொண்டு, ஐந்தலைநாகத்துள் பஞ்சபூத அடக்கத்தினை இயைவித்து நிற்பவள். அருளைச் சுரந்தளித்து மருளைக் களைபவள். ஏனை நெஞ்சப் பேதையரை வைது அநுக்கிரகம் செய்யும் ஆற்றல் பெற்று விளங்குபவள்.

1986 மார்ச் மாதம் 3-ஆம் திகதி நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு ஏற்பட்ட அக்கினி அனர்த்தம் 1958-ம் ஆண்டுக்குப் பின் 28 ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு நிழ்ந்த கோர அழிவெனலாம்.

### ஐந்தலை நாகவுரு

இறைவனும் இறைவியும் சிவ ஐக்கியமான பீடமே நயினை என்பது அறிஞர் கருத்து. மூலஸ்தானத்தில் இருக்கும் ஐந்தலை நாகவுருவின் அடிப்பாகம் வளர்ந்து பெற்ற தருமபரிபாலன சபையாரின் ஆன்மீகத் தொண்டும் அம்பிகையின் உயர் தலச்சிறப்பினை உலகுக்குணர்த்துவன.

காலத்தாலும், தல விசேடச் சிறப்பாலும் பெருமை பெற்றுத் திகழும் இத்தலத்தின் மெய்க்கீர்த்தியைச் சீரழித்து விட முயல்பவர்கள் பாழ்நரகக் குழிக்குள் வீழ்ந்து பதைப்புறுவர்.

### அமைப்புவேலை

நயினை ஸ்ரீ நாகபூஷணிக்கான ஆலயத்தினை 1788 இல் இராமலிங்கம் இராமச்சந்திரன் கட்டி மாசவும். ஆதாரமாக ஒம் 12 ஆம் நூற்றாண்டு கால - பொலநறுவைக் கால - சாசனம் இங்குள்ளது.

கோவிலுக்கு அருகே வடக்குக் கடலில் இன்றும் வெளிப்படையாகக் காணப்படும் கருடன் கல், பாம்பு சுற்றிக்கல் இரண்டும் இத்தலத்தின் பூர்வீகக் கதைகளினதும் கர்ணபரம்பரைச்செய்திகளினதும் உண்மையினை எடுத்து விளக்கி, பக்தி உணர்வை உண்டுபண்ணுவனவாய் உள்ளன.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் ... டுவது. கலைக்களஞ்சியம் தொகுதி 8இல் 'மணிபல்லவம்' என்ற பெயருக்கு அரியதொரு விளக்கமுமுண்டு.

கி. பி. 2ஆம் நூற்றுண்டு அளவில் இத்தலத்திற்கு உண்டான பெயரே 'மணிபல்லவம்'.

நயினையில் சக்திபீடம் (ஸ்ரீபுவனேஸ்வரி பீடம்) நிறுவியவன் 'இந்திரனே' என்பது மணிமேகலையால் உரைக்கப்படுகிறது.

### புத்தபகவானின் விஜயம்

அதன் பின்னர்தான் புத்தபகவான் நயினை தீவுக்கு வந்தார் எனக் கூறப்படுகிறது.

புத்தபெருமான் கி. மு 563 இற்கும் கி. மு 483 இற்குமிடையில் தமது யாத்திரை காரணமாக நாகதீவைத் தரிசித்து நாகவழிபாடியற்றியிருக்கவேண்டும். (நாகதீவு எது என்பது பற்றிய மயக்கம் வரலாற்றாசிரியர்களிடையே உண்டு.)

சாவகநாட்டு மன்னன் புத்தபெருமானது பாத பீடிகையைத் தரிசிக்க வந்ததாக மணிமேகலை கூறும். பர்மாவிலிருந்து தர்மசோக மகாராசா புத்திர சோகத்தால் வருந்தி நாகதீவுக்கு வந்தார் என்றும் கூறப்படுகிறது.

பாண்டவருள் ஒருவரான அர்ச்சுனன் நாககன்னிகையை மணம் செய்து 'பப்பிரவாகனை'ப் பெற்றான். 'பப்பிரவாசன் சல்லி' என்ற காணிப் பெயர் இதனை உறுதிப்படுத்துகின்றது. இன்றுள்ள ஆலயம் அமைந்துள்ள காணிப்பெயர் 'பப்பிரவாசன் சல்லி' ஆகும்.

புத்தபிரான், சரித்திர காலந்தொட்டே ஏற்பட்ட நாகவழிபாட்டை ஆராய்வதற்காகவும், அதைத்தாமும் வழிபடுவதற்காகவுமே நாகதீவுக்கு வந்தார் எனவும் கருதுவோருமுளர்.

### சகிப்புத் தன்மையும் பிற மத ஆலயங்களும்

போர்த்துக்கேயர் ஆலயத்தை இடித்து பொருள்களைச் சூறையாடினர். இக்காலம் கி. பி. 1620 கி. பி. 1621 இற்கும் இடைப்பட்ட காலமாகலாம்.

ஒல்லாந்தர் காலத்தில் கோவிலுக்கு நிகழவிருந்த அழிபாடுகள் தடுக்கப்பட்டன. ஒல்லாந்தர்களது சமயத்திற்கு வழங்கிய ஆதரவால் கி.பி. 1792 காலகட்டத்தில் நாகபூஷணி அம்பாள் ஆலயம் தப்பியது.

ஒல்லாந்தர் காலத்தில் நயினையில் புரட்டஸ்தாந்து தேவாலயம், பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்டன. சைவ மதம் காட்டும் சகிப்புத் தன்மையினால் நயினாதீவிலே பிறமதத்தினர் ஆலயங்கள் அமைக்க இடம் ஏற்பட்டது. இதனை இன்றுசிலர் நயினை மக்களின் பலவீனம் என்று கூற முற்படுவது பொருந்தாத கூற்றாகும்.

எத்தனை இடுக்கண் விளையினும் அவற்றினால் பாதிப்புற்று நலிவுற்று நின்று பின் அதினின்றும் மீண்டனரேயன்றி நயினை மக்கள் நலிவுகளினால் மனம்மாறியோ- மதம்மாறியோ கொண்ட கொள்கையினின்றும்விலகியோபிறழ்ந்தோ நடந்து கொண்ட கோடரிக்காம்புகளல்ல.

### புத்தகோயில்

நயினையில் புத்தர் சமாதிக் கோயில் 1930 - 40 காலகட்டத்தில் ஏற்பட்டது. 1947 இல் விகாரை கட்டப்பட்டது. 1954 இல்புத்த விக்கிரகம் பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. 1958 ஆம் ஆண்டு அன்றைய அரசு புத்த கோயிலைப் புனரமைப்புச் செய்தது.

1919 இல் நயினாதீவில் பள்ளிவாசல் கட்டப்பட்டது. 1890 இல் புரட்டஸ்தாந்து மதத்தேவாலயம் வீடு என்பன கட்டப்பட்டன.

சர்வமத சந்நிதியாக மிளிருகிறது நயினை. ★



அலைகடல் மத்தியில் வீற்றிருந்து அகில மக்களுக்கு அருள்புரியும் அன்னை நாகபூஷணி சித்திரத் தேரேறி வந்து தரிசனம் தரும் அற்புதக் காட்சி.

செல்வதாகவும், அதன் வால்முனைப்பில் லிங்கப் பிரதிஷ்டை விளங்குவதாகவும், சமயநம்பிக்கை கொண்ட ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

'வெட்ட வெட்ட துளிர்விடும் மரம்'போல அம்பிகையும் அனர்த்தத்தின் பின் ஆனந்த சொரூபியாக வளர்ந்து பொலிவு பெற்று விளங்குவாள் என்பது அனுபவ உண்மை.

தொண்டர்களது புனிதமான பணியும் பரம்பரைபரம்பரையாக அம்பிகையின் திருவடிகளுக்குத் தொண்டு புரியும் அநுபூதி நெறி கைவரப் ஞர். அவர் வழிவரும் ஆண்சந்ததியினர் இன்றும் பரம்பரை முகாமையாளர்களாகவுள்ளனர்.

1935 இல் கிழக்கு வாயில் பிரதான கோபுரம் கட்டப்பட்டது. 1951இல் விமானம் புனரமைத்து சம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் நிகழ்ப்பெற்றது.

அம்பாளுக்கான புதிய சித்திரத்தேர் 8-7-1957 இல் வெள்ளோட்டம் விடப்பட்டது.

வணிக வரலாறும், சமயவரலாறும் இணைந்த தலமாக நயினை விளங்கியது என்பதற்கு அழியாத சான்றுச் சின்ன தலவிருட்ஷம் வன்னி மரம்.

அம்பாளின் தேரிலே- அதன் சிற்பங்களினூடே ஆலய வரலாற்றுச் சம்பவங்கள் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

நாசம் பூசித்து நின்ற இத்தலம் நாகேஸ்வரம் எனவும் பெயர்பெறும்.

### மணிபல்லவம்

'மணிபல்லவம்' என்ற பெயர் இத்தலத்திற்கு இதிகாச, காவிய இலக்கியச் சிறப்பால் ஏற்ப

- கனகசபாபதி நாகேஸ்வரன் -
[பி. ஏ. (சிறப்பு), எம். ஏ.]
உதவி விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ் பல்கலைக்கழகம்

நயினை நாகபூஷணி அம்பாளின்
அருளை இறைஞ்சுகிறோம்!

★ காகிதாதிகள்
★ ஸ்ரேஷனரிப் பொருள்கள்
★ அன்பளிப்புப் பொருள்கள்
★ சகலவிதமான மின்சார உபகரணங்கள்

அம்பலவாணர் அன் சன்ஸ்
196, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மணித்தீவில் மனஸாதேவியாக
வழிபடப்பட்டு வரும்
அருள்பெருகு நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
ரதோற்சவ நன்னாளில் தமிழ் மக்களுக்கு
அம்பாளின் நல்லாசி வேண்டி நிற்கும்

"நாகதர்சினி"
பலசரக்கு மாளிகை,
306, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்நகர்.

நாகதர்சினி உணவகம்
57, சத்திரம் மார்க்கட்,
யாழ்ப்பாணம்.
உரிமையாளர் : க. மகாலிங்கசிவம் (J.P.)
தந்தி : நயினையம்பதி

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
தேர்த்திருவிழா

" ஏழ்கடல் வைப்பினுள் அருள்மணம் வீசியே
எழில் கொண்டு வாழுகிறுய் - அம்மா
வாழ்வுற எங்கட்குக் கருணையைக் காட்டியே
வகை செய்து தாராயோ "



★ பூபாலசிங்கம் புத்தகசாலை
★ P. B. D. இன்டஸ்றீஸ்
★ Stationery Stores
★ புத்தகக் களஞ்சியம்

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23631 தந்தி: BOOKS JAFFNA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்



நயினைஸ்ரீ நாகபூஷணி அம்பாள்

## ஆயிரம் வடிவங்களில் ஆதி சக்திக்கு வழிபாடு

'அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்' என்று கூறிய ஔவை, அன்னையையே முதலில் வைத்தாள். சமய நெறிகளிலும், சமூகப் பழக்க வழக்கங்களிலும் தாய்மைக்கே முதலிடம் தந்தனர் எம்முன்னோர்கள்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' என மாதாவைத்தானே முதன்மையாக வரிசைப்படுத்துகிறோம்?

தாயை 'சக்தி' என்றும், தந்தையைச் சிவன் என்றும் கொண்டே 'சக்தி — சிவ' வழிபாடுகள் தோன்றின.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்றுரைத்த வள்ளுவரும் அன்னை சக்திக்கே முதலிடம் தந்து தமது குறளை ஆரம்பிக்கின்றார்.

'சக்தி இருந்தால் செய். இல்லையென்றால் சிவனே என்று இரு' என்பது பழக்கத்தில் உள்ள வாக்கியம்.

'சக்தி இல்லையேல் இயக்கம் இல்லை' என்றுதான் விஞ்ஞானிகளும் கூறுகின்றனர்: விஞ்ஞானிகளின் கண்ணோட்டத்தில் சக்திக்குத்தான் எத்தனை பிரிவுகள்? எத்தனை பரிமாணங்கள்? மின் சக்தி, அணுசக்தி, இயந்திரசக்தி, பொறிமுறைச் சக்தி இயக்கசக்தி, நிலையியற் சக்தி—இப்படி எத்தனையோ வகைகள்.

இத்தனையையும் கண்டறிந்து, சக்திவழிபாட்டு முறையில் அன்னை ஆதிபராசக்தி ஆயிரம் வடிவம் தந்து ஆயிரம் நாமங்கள் தந்து ஆயிரம் குணங்கள் கூறி வழிபட்டனர் நம் முன்னோர்.

இந்த வகையில் நயினையம்பதியில் நாகபூஷணித் தாயாக — ஸ்ரீ புவனேஸ்வரி பீடமாக — நாகேஸ்வரியாக — நிற்கின்றார் எம் அன்னை. ★

மலர் ஏற்பாடு:
சண். ஜோன்சன், எஸ். ராஜ்குமார்



எழுந்தருளி அம்மன்


யாழ். நகர மக்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

உங்கள் கலர்ப் படச் சுருள்களை
நவீன முறையில் கழுவி
நீண்ட கால உத்தரவாதத்துடன்
பிரிண்ட் செய்து
மூன்று நாட்களில் பெற்றிட
நீங்கள் நாடவேண்டிய இடம்

★ ★ ★

ROYAL PHARMACY
156, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
பிரதி ஒன்றுக்குச் சட்டணம் 4/50 மட்டுமே



நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருள்
தமிழ் மக்கள் அனைவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

- குளிர்பான வகைகள்
- பிரிமா பாண்

ஹோட்டல்ஸ் சோபிகா
410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
யாழ். - கொழும்பு பஸ் ஆசனம் பதிவுசெய்யும் இடம்.


# இறைவனின் அழித்தல்தொழிலை குறித்து நிற்கும் தேர்த்திருவிழா

திருமதி. நித்தியவதி நித்தியானந்தன்
(உதவி விரிவுரையாளர், நுண்கலைத்துறை, யாழ் பல்கலைக்கழகம்)

கோயில்லா ஊரினில் குடியிருக்க வேண்டாம் எனவும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' எனவும் கோயில்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் பழமொழிகள் வழக்கில் இருந்து வருகின்றன. இதற்குக்காரணம் கோயில்கள் இறைவனின் உறைவிடங்களாக மட்டுமன்றி சிற்ப ஓவியக் கலைகளின் சாட்சியங்களாக அவை திகழ்வதே என்று கூறினால் அது மிகையாகாது. கடவுளுணர்வை எழுப்ப கலையுணர்வுஒரு வாயிலாகக் கருதப்பட்டது. பண்டைத் தமிழ் மன்னர்களும் அதனை ஊக்கிவளர்த்து வந்தனர்.

ஆதியில் மனிதன் இயற்கைச் சக்திகளாகிய சூரியன், காற்று, மழை, நெருப்பு முதலியவற்றை தெய்வங்களாக வணங்கினான். இயற்கை வழிவந்த இந்த இறை வழிபாட்டில், ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒவ்வொரு இயற்கை நிகழ்ச்சி மூல காரணம் என்னும் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டது. பின்னர் அறிவு வளர வளர மக்கள் இயற்கைச் சத்திகளுக்குப்பல்வேறு வடிவங்கள் கொடுத்து தெய்வங்களாகவழிபடலாயினர்.

தம்மைப் போல் தெய்வங்களுக்கும் கணவன், மனைவி, மக்கள், பணியாட்கள் முதலியோரை கொண்டவர்களாகப் படைக்கப்பட்டமை மக்களது வாழ்க்கை முறையின் எண்ணத்தால் ஏற்பட்டவையாகும்.

மனிதனை விட இறைவன் ஆற்றல் மிக்கவன் என்பதை விளக்குவதற்காகவும் அவனது ஆற்றலில் உட்கருத்து நிறைந்துள்ளன என்பதைக் கூறுவதற்காகவும் பல்வேறு திருவுருவ அமைப்புகளைக் கொண்டும், பலவகையான படைக்கலன்களைக் கைகளில் பெற்றனவாகவும் அவன் உருவாக்கப்பட்டுள்ளான்.

இதனை மேலும் விளக்குவதற்காகப் புராணங்கள், இதிகாசங்கள் முதலியவற்றில் எண்ணிறைந்த கதைகள் கூறப்பட்டுள்ளன. இக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு கோவில்கள் தோறும் திருமேனிகள் அமைக்கப்பட்டதுடன் சிற்ப ஓவியங்களும்இடம் பெற்று கோவில்களைக் கலைக் கூடங்களாக மாற்றின.

சமயச் சடங்குகளும் விழாக்களும் அதிகரித்ததால் தெய்வத் திருமேனிகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கம் ஏற்பட்டிருக்கவேண்டும். கோயிலின் கருவறையில் நிறுவப்பட்டுள்ள சிற்பங்களை ஊர்வலத்தில் எடுத்துச் செல்வது மரபன்று. எனவே அக்கால மக்கள் இறைவனின் திருவுருவங்களை உலோகங்களில் செய்து அவற்றை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கத்தைப் பின்பற்றினர்.

சோழர் காலகல்வெட்டுக்கள் சில செப்புத் திருமேனிகள் நிறுவப்பட்டதையும், அவற்றை கோயிலின் திருச் சுற்றினைச் சுற்றி சுமந்து செல்வதற்கென தனியான ஆட்கள் நியமிக்கப்பட்டதையும் குறிப்பிடுகின்றன.

தெய்வப்படிமங்களை திருவிழாக் காலங்களில் திருவீதிகளைச்சுற்றிஎடுத்துச் செல்வதால் உடல் ஊனமுற்றோருக்கும், உடல் நலிவுற்றோருக்கும் கோயில் புக அனுமதி அளிக்கப்படா தோர்க்கும்இறைவனின் திருவுருவத்தை உற்சவ மூர்த்தியாகக் கண்டு வணங்கும் வாய்ப்புக் கிடைக்கிறது.

கோவில்களில் நடைபெறும் விழாக்களில் தேர்த்திருவிழாவே மிகச் சிறந்ததென்றும்—

இறைவனின் பஞ்சகிருத்திய நிகழ்ச்சியைப் புலப்படுத்த எழுந்த திருவிழாக்களில் அழித்தல் தொழிலை எமக்கு தேர்த்திருவிழா புலப்படுத்தி நிற்கிறதெனவும் சமய அனுபூதிச்செல்வர் கூறுவர்.

'தேரின் வடம்பிடித்தோர் தமக்கென மேலிடத்தே ஓர் இடம்பிடிப்பர்' என்றும் கூறப்படுகிறது.

புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு தேர்த்திருவிழாவிற்கு இத்தகைய தொருவிளக்கம் வைதீகவியலாளர் கொடுத்து நிற்கும் அதே வேளையில் இவ்விழாவினை நாம் மற்றோர் கண்ணோட்டத்திலும் நோக்கக்கூடியதாக இருக்கிறது.

பண்டைக்கால மக்கள் மன்னனை இறைவனுடைய பிரதிநிதியாகக் கருதி வந்தனரென்பதற்கு உலக நாகரிகம் ஒவ்வொன்றிலும்சான்றுகள் உள்ளன. இதுபோன்று தமிழ் மக்களும் அரசனை இறைவனாகவோ அல்லது இறைபண்புடையவனாகவோ கருதியிருக்கின்றனர். எனவேதான் 'திருவுடைய மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே' ஆழ்வார் திருவாய் மொழிந்துள்ளார்.

இறைவன் உறையும் எழுநிலை மாடமும், மன்னனது அரண்மனையும் கோயில் என்னும் பொதுப்பெயரால் குறிக்கப்பட்டுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில், கண்ணகி பெருமான் முடியுடைய மூவேந்தர்களாக உள் வரிக் கோலம் பூண்டு ஆட்சி புரிந்தான் எனப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

பல்லவர் காலக் கல்வெட்டுக்கள் பலவற்றிலும் செஞ்சடையண்ணல், மலைமகள், கந்தன் ஆகியோரை அரசன், அரசி, இளவரசன் முதலியோருக்கு ஒப்பாகக் கூறியிருப்பதைக் காணலாம்.

பல்லவர்கால குகை வரை சிற்பங்களும், மாமல்லை ஆதிவராக மண்டபத்திலுள்ள அரசன் அரசியர் சிற்பங்களும் இறைவனும் மன்னனும் ஒன்றெனும் கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவை என்று கூறப்படுகிறது.

மக்களுக்கு கண்கண்ட தெய்வமாக இருந்த மன்னன், அரசியல் செல்வாக்கு, பொருளாதாரப் பலம் என்பன கொண்டு விளங்கினான். இத்தகைய பீடும் பெருமையும் மிக்க மன்னன் தன் நிலையிலின்றும் மெல்லச் சரிய, மக்கள் - மனநிலையில் பாரியதொரு திருப்பம் ஏற்பட்டு இருக்க வேண்டும்.

அரசன் எத்தகைய சிறப்புடையவனாகவும் வலிமை மிக்கவனாகவும் இருந்தாலும்அவனது வாழ்வு, செல்வம், புகழ் அத்தனையும் அநித்தியமானது; அழியக்கூடியது. எனவே நிலையானதும், உண்மையுள்ளதும் என்றும் அழியாததும் பரம்பொருள் ஒன்றுதான் எனஎண்ணி, மன்னனுக்கு செய்த அத்தனை உபசாரங்களையும் தெய்வத்திற்குச் செய்ய முற்பட்டார்கள்மக்கள். திருப்பள்ளி எழுச்சியில் இருந்து இறைவனுக்கு செய்யப்படும் பதினாறு வகை சோடச உபசாரங்கள் வரை அனைத்தும் மன்னனுக்குச் செய்யப் பட்டவையே.

மன்னனிடம் இருந்த நால்வகைப் படைகளில் தேர்ப்படையும் ஒன்று. இதை மன்னன் போருக்குச் செல்லும் போதே அதிக அளவில் பயன்படுத்தினான். எனவே இறைவனது பஞ்சகிருத்திய தொழில்களை விளக்கும் திருவிழாக்களில் தேர்த் திருவிழாவையும் புகுத்தி அதனை அழித்தல் தொழிலைக் குறிப்பாக மானசீகப்படுத்தினர் முன்னோர்.

இதற்கு மன்னன் போருக்குச் செல்லும் போது தேரிலே சென்றமையும், போர் என்பது அழிவைக் குறித்து நின்றமையும் காரணமாக இருந்திருக்க வேண்டும் என நாம் கொள்வது பொருத்தமுடையதே. ★


நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்.
எல்.பி. (L.P.) காஸ், சகல விதமான சால்மா வகைகளையும் மொத்தமாகவும் சில்லறையாகவும்பெற்றுக் கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்.

சிற்றி ஏஜன்சி
158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்



நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்

* பாடசாலைப் புத்தகங்கள்
* உபகரணங்கள்
* அப்பியாசப் புத்தகங்கள்

மலிவாகக் கிடைக்கும் இடம்

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்-ஆலயத்தோற்றம்

## அறங்காவல் சபைத் தலைவர் அடியார்க்கு விடுக்கும் செய்தி!



குலசேகரம்

சக்தியெல்லாம் ஒன்றாகி எம் அன்னை சித்திரத் தேரில், சிந்தை குளிர எழுந்தருளி, சாம்பவ தீட்சையைச் சகலர்க்குமளித்து வீதியுலா வந்து ஆன்மகோடிகளுக்கு அருள்பாலிக்கும் இந்நாளில் அன்னையின் திருவடிகளைத் தொழுது அவள் திருப்புகழ் கூறுவதில் களிப்படைகின்றோம்.

ஆண்டு சிலவற்றின் பின், மீண்டும் அடியார்களின் பெருந்தொகைச் சங்கமத்தை இங்குகாண்பதாலும், அவர் தம் திருத்தொண்டுகளைப் பார்ப்பதாலும் பொங்கிப் பூரிப்படைகின்றோம்; அவர் தம்மைப் போற்றுகின்றோம். இவை அனைத்தும் எம் தாயின் திருவிளையாடல்களே. அவள் சிறப்புக் கூற எமக்கு நாவில்லையாகுலும் அவளுக்குச் செய்ய வேண்டிய பணிகள் சிலபற்றிக் கூருமல் இருக்கவும் முடியவில்லை.

கடல் நடுவே கருணைக் கடலாக விளங்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் 1986-ம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றும் நாள் விளைந்த அழிவுகள் - அனர்த்தங்கள் - அன்னையின் அடியவர்கள் அனைவரும் அறிந்ததே.

பிள்ளையார் தேர், சுப்பிரமணியர் தேர், மஞ்சம், சப்பறம், கோபுரக் கதவு, மடங்கள், காரியாலய உபகரணங்கள் அனைத்தும் பார்ப்பவர் உள்ளத்தை உருக்குமளவிற்கு ஊறுபடுத்தப்பட்டன.

குறைவிலா நிறைவுடன் விளங்கும் அன்னையின் திருவருளால் புனருத்தாரணப் பணிகள் பொலிவுபெறத்தொடங்கின. சப்பறம், சகடை, [illegible]ரக்கதவு என்பன இன்று நிறைவுற்று புது வடிவம் பெற்றுள்ளன.

அழிவுக்காக அரசு அளித்த நிதி ஆலயப் பணிச் செலவுக்குப் போதியதல்ல என்ற குறையுள்ள போதும் குறைவின்றித்திருப்பணிகள் நடைபெற்ற வண்ணம் இருக்கின்றதென்றால் அதற்குக் காரணம் எவரிடமும் நாம் கை நீட்டிப் பணங்கேட்காதளவுக்கு அன்னை எமக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கின்றாள்; இருப்பாள்; இருக்கவேண்டும் - என்பது எமது நம்பிக்கை. அவளது அபயகரமும் எமக்கு அதையே கூறுகின்றது.

இந்நிலையில் யாராவது திருப்பணிக்காக நிதி சேகரிப்பார்களானால் - அது தவறு. தவறான இடத்தைச் சென்றடைகின்றது - தீவினை என்பதனைத் திடமாகத் தெரியவைக்கின்றோம்.

இன்று நடைமுறையிலும், செயல்முறையிலும் அன்னைக்கு நாம் செய்யவேண்டியநற்பணிகள் நான்கு.

ஒன்று:- 63 நாயன்மார்களையும் கல்யாண மண்டபத்தில் எழுந்தருளவைத்தல், இப்பணி தற்சமயம் செயலுருவம் அடைந்து வருகின்றது.

இரண்டாவது:- புவனேஸ்வரி அம்மனுக்கு ஆலயச் சூழலில் ஓர் ஆலயம் அமைப்பது அதற்கான ஆயத்தங்கள் ஆரம்ப நிலையில் உள்ளன.

மூன்ருவது:- புதிய தேர்களையும், மஞ்சத்தையும் நிறைவுறச் செய்வது. இதற்குத் திருத்தமானதும் பொருத்தமானதுமான மரங்கள் தேவைப்படுகின்றன. இம்மரங்களை மனமுவந்து அளிக்க விரும்பும் தொண்டர்கள் இருந்தால், முன் வந்தால் அவற்றைப் பெறுவதற்கான பொறுப்பைத் தலைமேற்கொள்ளச் சித்தமாகவுள்ளோம்.

நான்காவது:- தூலலிங்கமாக நின்று தூரத்தில் உள்ளவர்க்கும் தரிசனம் அளிக்கக்கூடிய ஓர் இராசகோபுரத்தை அன்னைக்கு அமைப்பது.

அன்பர்களே!

நல்லோர்க்கும், வல்லோர்க்குமன்றி, எல்லோர்க்கும் அருள்பாலிக்கும் அன்னை எல்லா நலமும் அளிப்பாள் என்ற நம்பிக்கை நமக்குண்டு.

த. குலசேகரம்
தலைவர்
நயினை ஸ்ரீநாகபூஷணி அம்மன்
அறங்காவலர்-சபை

## நாகேஸ்வரி வழிபாட்டின் வரலாற்றுக் கருவூலம்

ஆதி இலங்கையில் பௌத்தம் பரவுவதற்கு முன்பு நிலவிய சமயக் கூறுகளில் நாகேஸ்வரி வழிபாடு ஒன்றென்பது வரலாற்றறிஞர்களின் திரண்ட கருத்தாகும்.

இவ்வகையில் தூய நாகேஸ்வரிவழிபாட்டின் தொன்மைக்கு நயினைஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் ஒரு வரலாற்றுக் கருவூலமென்பதில் ஐயத்திற்கிடமில்லை.

சக்திபீடங்களுள் மணித்தீவில் புவனேஸ்வரி பீடமாக இவ்வாலயம் குறிப்பிடப் படுகின்றது. இதனைத் தேவிபாகவதம், தேவிபராக்கிரமம், பிரபஞ்சஉற்பத்தி, யாமளதாண்டசம் முதலிய இலக்கியங்கள் இயம்புகின்றன. திரிபுரபைரவி பீடமும் இத்தலமே என்பதும் அறிஞர்களது கருத்தாகும்.

இவ்வுண்மைகளை மறுக்கும் விதத்தில் தமிழக அறிஞர்கள்மட்டுமன்றி, ஈழத்து அறிஞர் சிலரும் இக்கோயில் ஒருகண்ணகி கோயில் எனக் காட்ட முனைகின்றனர். இது இவ்வாலய வரலாற்றின் உண்மையை மறைக்க முயலும் செயலாகும்.

இவ்வாலயத்தைக் கண்ணகி கோயிலாகக் குறிப்பிடுவதற்கு இவ்வாலய வரலாறுகளோ, வழிபாட்டு மரபுகளோ இடம் தருவனவாக வில்லை.

நாகவழிபாட்டோடு ஈஸ்வரிவழிபாடு இணைந்திருப்பது புராதன இந்துமதப் பண்புகளுள் ஒன்ருகும். புராதனமான இந்த இணைவினையே இந்தியாவில் மனஸா தேவி வழிபாடாக காண முடிகின்றது. இதனையே நயினையில் பிரத்தியட்சமாக நாம் காண்கின்ரோம்.

இவ்வாலயத்தில் சக்தியின் சின்னமாகிய பாம்பு குண்டலினி சக்தியாக வழிபடப்படுகின்ருள். இதுவே உண்மை வரலாருகும். அன்னை அகிலாண்டேஸ்வரியையானையும் சிலந்தியும் வழிபட்டது போன்று, நயினை நாகபூஷணியை நாகம் பூக்கொண்டு வந்து வழிபட்டதைக்கண்டவர்கள் இன்றும் நயினுதீவில் இருக்கின்ருர்கள்.

மா. வேதநாதன்
(துணை விரிவுரையாளர்,
இந்துநாகரிகத் துறை,
யாழ். பல்கலைக்கழகம்)


நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்

**ரேடியோஸ்பதி**

58, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

லீலா பிஸ்கட்டுகள்
ஒரு ஈழத் தயாரிப்பு

கை தேர்ந்த தொழில் நுட்ப வல்லுநர்களால் நல்ல தரமாக தயாரிக்கப்பட்டவை

**லீலாபேக் ஹவுஸ்**

மார்க்கட் சதுக்கம் - சங்கானை

கிளை:
சிரணி - சண்டிலிப்பாய்

தரமான உள்ளூர் உற்பத்திகளுக்கு ஆதரவு தாரீர்.

நயினை அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்

**நாகேஸ்வரி ஸ்ரோர்ஸ்**

743, கே. கே. எஸ். வீதி,
(யாழ். இந்துக்கல்லூரிக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.

நயினை அம்பாளை இறைஞ்சுகின்றோம்

* போட்டஸ்ரட்
* ரேணியோ
* தமிழ் ரைப்பிங்
* ஆங்கில எலக்ரோனிக் ரைப்பிங்

ஆகியவற்றுடன் அடையாள அட்டைகள் காரியாலய அட்டைகள் மற்றும் பாதுகாக்க வேண்டிய முக்கிய தஸ்தாவேஜுக்கள் போன்றவற்றை

பிளாஸ்ரிக் கவரிங் Lamination செய்து கொள்ள நாடுங்கள்.

**கிளீன் கட்**

239, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருளை இறைஞ்சுகின்றோம்

**ரி. குமாரசாமி டெக்ஸ்டயில்ஸ்**

248/1, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கிளை:
**சௌபாக்கியாஸ்,**
22, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23034

நயினை நாகபூஷணி அம்பாளின் அருட் கருணையை நாடுகிறோம்.

**ஸ்ரீ தாமோதர விலாஸ்,**

239, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

# நல்லன நல்குபவள் நயினைத் தாய்

அலைகடல் நடுவே வீற்றிருந்து, அருளொளி பரப்புகின்ற ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தலம் நயினாதீவு.

''மணிபல்லவம்'' என ஆராய்ச்சியாளர்களால் புகழ்ந்து பேசப்படுவதும் இத்தீவு. ஈழமணித்திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணக்குடா நாட்டின் தென்மேற்கே சப்த தீவுகளுக்கு மத்தியில் உள்ளது இது.

சரித்திரப்பிரசித்தி பெற்ற இத்தீவு, மணித்தீவு, நாகநயினார்தீவு, நயினார்தீவு, நாகதீவு, மணிபல்லவத்தீவு என்றெல்லாம் அழைக்கப்பட்டுவருகிறது.

### புவனேஸ்வரி பீடம்

ஈழத்திலுள்ள புராதன சக்தி வழிபாட்டுத் தலங்களுள் மிகவும் சிறப்பு வாய்ந்தது நயினையம்பதியிலுள்ள நாகேஸ்வரி ஆலயம்.

இது அறுபத்து நான்கு சக்தி பீடங்களுள் ஒன்றான ''புவனேஸ்வரி'' பீடமாக விளங்குகின்றது.

அடியார்களின் புண்ணிய ஸ்தலமாக விளங்கும் நயினாதீவு மூர்த்தி, தலம், தீர்த்தம் என அத்தனையும் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் அற்புதத் திருத்தலம்.

நாகபூஷணி அம்மன் ஆலயம் சமுத்திரத்தை நோக்கியபடி, தம்மை வந்தடையும் மெய்யடியார்களை வரவேற்பது போன்று அழகுறக்காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. தன்னைவந்தடையும் அடியார்களுக்கு வேண்டிய வரங்களை

**நாக. குமாரசூரியர்**
**(அறங்காவலர்)**

யெல்லாம் ஈர்ந்தருளுகின்றாள் அன்னை. நல்லன அருளி நலம் தருகின்றாள் நயினைத்தாய்.

### நாக சாந்தி

பக்தர்கள் இத்தலத்தில் நாகசாந்தி, நாகப்பிரதிஸ்டை போன்ற கிரியைகளைச் செய்து புத்திர பாக்கியத்தைப்பெற்றுக் கொள்கின்றதை நாம் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி'' உருகி நிற்கின்ற அடியார்களின் மனக்குறைகளை நீக்குகின்ற பராசக்தியாக வீற்றிருக்கின்றாள் நாகபூஷணி அம்மன்.

உலகத்தை ஆளுகின்ற பராசக்தியானவள் தனது குழந்தைகளின் குறைகளை இத்தலத்தில் எழுந்தருளி நின்று தீர்த்துவைக்கிறாள். இதனால் தான் அம்பாளைத் தரிசிப்பதற்காக ஆயிரக்கணக்கில் அடியார்கள் வந்து குவிகின்றார்கள்.

இக்கோயிலின் வரலாறு குறித்துப் பல கர்ணபரம்பரைக்கதைகளும், வரலாற்றுத்தகவல்களும் கூறுகின்றன.

### நயினாபட்டர் பூசித்த தலம்

நயினாபட்டர் என்ற அந்தணரால் இங்குள்ள அம்பிகை பூசிக்கப்பெற்றமையால் நயினாதீவு என்று இத்தலம் அழைக்கப்படுவதாகவும் ஒரு கதை கூறுகின்றது.

இவ்வாலயம் டச்சுக்காரரால் முன்னொருபோது தாக்கப்பட்டு அழிக்கப்பட்டபோது அங்கு இருந்த நாகதம்பிரான் விக்கிரகம், இப்போது அருகிலுள்ள புளியந்தீவில் இருப்பதாக ஆராய்ச்சியாளர் கூறுகின்றார்கள். முதியோர்களும் இதனை ஏற்றுக் கொள்கின்றனர்.

அந்நேரத்தில் அம்பிகையின் திருவுருவத்தை ஆலம் பொந்து ஒன்றினுள் ஒளித்து வைத்திருந்த அடியார்கள் திரும்பவும் கோயிலைக் கட்டி வழிபட்டனர் என்பதும்—

அப்போதுஇங்கிருந்த செப்புத்தேர், பவளத் தேர்கள் எல்லாம் அந்நியர் கைபடாமல் வடமேற்குக் கடலில் தள்ளிவிடப்பட்டன என்பதும் கர்ண பரம்பரைக்கதைகளாகும்.

### அம்பாளை அர்ச்சித்த அரவம்

முன்னொரு காலத்தில் அம்பாளை அரவமொன்று அர்ச்சித்ததாக பரம்பரைக் கதையுண்டு. திருவானைக்காவிலுள்ள இறைவனை யானையும்- சிலந்தியும் பூசித்ததைப் போன்று நயினை ஸ்ரீ நாகபூஷணியம்மையை அரவமொன்று பூசித்து வந்ததாக புராதனக்கதைகள் கூறுகின்றன. அரவம் பூசித்தமையை நினைவூட்டுவனவாகக் கோயிலின் வட கடலினுள் பாம்பு சுற்றிய கல், கருடனிருந்த கல் என இரண்டு கற்கள் காட்சியளித்துக் கொண்டிருக்கின்றன. மக்கள் மத்தியில் இப்புராதனக் கதைகள் வேரூன்றியுள்ளன.

நாள் தோறும் நூற்றுக் கணக்கான அடியார்கள் வருகின்றார்களாயினும், திருவிழாக் காலங்களில் பெருந் தொகையான அடியார்கள் அம்பிகையைத் தரிசிப்பதற்காக வருகை தருகின்றார்கள்.

தன்னை நாடிவரும் அடியார்களுக்கு அன்னையானவள் தனது ஞானக்கண்களால் அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றாள்.

அன்னையின் இவ்வருட உற்சவம் கடந்த 15ஆம் திகதி புதன் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறுகின்றன.

இன்று தேர்த் திருவிழாவும் நாளை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

திருவிழாவிற்கான ஏற்பாடுகள் வழமையைப் போன்று சகல வசதிகளும் சிறப்புடன் செய்யப்பட்டுள்ளன. ''அமுதசுரபி'' அன்னதானசபையினரும் வழமையைப் போன்று அன்னதானம் செய்ய சகல முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ★

# சிரம் மேல் கரம் தூக்கி வணங்க வேண்டியது ஏன்?

கோயிலில் இறைவன் முன் வணங்கும் பொழுது, உடலை வளைத்து முழங்கால்களால் முட்டிபோட்டு, இரு முழங்கைகளையும் தரையில் ஊன்றி, இரு கரங்களையும் தரையில் சாய்த்து, கரங்களின் நடுவே தலையைத் தரையில்படும்படி விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்வதோடல்லாமல் எழுந்து நின்று தலைக்கு மேலே இரு கரங்களையும் உயர்த்திக் கூப்பி இறைவனை வணங்கவேண்டும்.

அவ்வாறு இறைவனை வணங்கும் காட்சி, நீந்தத் தெரியாத ஒருவன் நீரினுள் விழுந்ததும், கைகால்களை அசைத்து அசைத்து நீரினுள் மூழ்காமல் இருக்க முயன்று தோல்வியடைந்து, பின் கைகளைத் தலைக்கு மேலே உயர்த்துவது போலத் தோன்றுகிறது.

நீரினுள் வீழ்ந்தவன் கைகால்களை அசைத்துக்கொண்டிருக்கும் பொழுது கரையில் இருப்பவர்கள் நீரில் விழுந்தவனுக்கு நீச்சல் தெரியாது என்பதை அறிய முடிவதில்லை.

ஆனால் அவன் தன் முயற்சிகள் அனைத்தும் பலன் அளிக்காமற்போன பின்பு இரு கரங்களையும் தலைக்கு மேலே உயர்த்துகிறான். அப்பொழுது கரையில் இருப்பவர்கள் உடனே நீரில் விழுந்து அவனைக் காப்பாற்றுகின்றார்கள்.

துச்சாதனன் திரௌபதியின் துகிலை உரிந்தபோது, அவள் முதலில் தன்சக்தியால், தன்னுவானமட்டும்போராடினாள். தன்னுடைய போராட்டங்களினால் வெற்றி பெற இயலவில்லை என்று உணர்ந்ததும், இருகரங்களையும் சிரம்மேல் குவித்து, 'கண்ணா, காப்பாற்று!' என்றதும், கண்ணன் திரௌபதியின் மானத்தைக் காப்பாற்றினான்.

நம்மால் காரியங்களை சாதிக்கமுடியும் என்றும் நம்மால் அரியசெயல்களையும்எளிதாகச்செய்யமுடியும் என்றும் எண்ணும் பொழுது, இறைவன் நம்பணியில் குறுக்கிடுவதில்லை. நாம் அடையும் தோல்விகளையும், கஷ்டங்களையும் கவனித்துக் கொண்டிருக்கிறான். ஆனால் 'ஆண்டவனே அபயம்!, என்று இரு கரங்களையும் சிரம்மேல் குவித்து இறைவனை வழிபடும்பொழுது, அவன் நம்மைப் பிறவிப் பெருங் கடலில் இருந்து கரை ஏற்றுகிறான்.

எனவே இறைவனை வணங்கும்பொழுது பிறவிப் பெருங்கடலில் இருந்து நீந்திக் கரைசேர இரு கரங்களையும் சிரம் மேல் உயர்த்தி, கூப்பி வணங்க வேண்டும்.

**- குன்றக்குடி அடிகளார்**


அல்லலுறும் நாட்டு மக்கள் அனைவருக்கும் அம்பாளின் தேர் உற்சவம் கண்டு அவலம் நீங்கிட அருள் வேண்டி நிற்கும்

**வைகை ரெக்ஸ்டயில்**

5, பரமேஸ்வரா வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

- ✶ புடைவை வகைகள்
- ✶ சுவர்க்கடிகாரம்
- ✶ இந்தியன் கைத்தறிச் சாறிகள்
- ✶ பாட்டா பாதணிகள்

தேரோடும் திரு நயினைப் பெருவீதிசிறக்கவும்

**நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருள்**

விவசாயிகள், வர்த்தகர்கள் அனைவருக்கும் கிடைக்கவும் பிரார்த்திக்கும்

**சுகபாணி ஸ்ரோர்ஸ்**

214, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,

தொலைபேசி: 22566

உள்ளூர் உற்பத்திப் பொருள்கள் கொள்வனவாளர், பிரபல கமிஷன் விற்பனையாளர்களும்.

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளை நாடும்

**மெடிக்கெயர் கிளினிக்**

டாக்டர். வி. ருத்திரேஸ்வரன்
344, கண்டி விதி, யாழ்ப்பாணம்.

அலைகடல் மத்தியில் அமர்ந்திருந்து அடியார்களுக்கு அருள் மழை பொழியும் அன்னையின் திருத்தேர் பவனி வரும் இந்நன்னாளில் அல்லலுறும் ஈழத் தமிழர்கள் துயர்துடைத்து பல்லாண்டு காலம் நலமாக வாழ வேண்டும் என எம் அன்னையைப் பிரார்த்திக்கிறோம்.

**சியாமளா கூல்பார்**

140, நவீன சந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான சுத்தமான சைவ உணவு வகைகளுக்கு

யாழ் நகரில் புதிய நிறுவனம்

✶ ✶ ✶

**விஷ்ணு விஹார்**

163, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ் நிலையம் முன்பாக)

நயினை நாகபூஷணி அம்பாளின் திருவருளை நாடும்

**சிற்றி மெடிக்கல்ஸ்**

487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஆங்கில மருந்து வகைகள், பால்மா வகைகள் வாங்க சிறந்த இடம்.

**நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் சித்திரத் தேர்த்திருவிழா**

''அலைவெள்ளம் பொங்கி அரவணைக்கும் அம்பிகையின் அருள் வெள்ளம் பொங்கிவர வேண்டுகிறோம்''

**தர்ஜினி ஸ்ரோர்ஸ்**

இல: 89, 90, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24259

அபிஷேக திரவியங்கள், வெற்றிலை, சீவல், புகையிலை மற்றும் கிரியைப் பொருட்களுக்கு
**எங்களை நாடுங்கள்**

சுஸ். சிவகுமார் ஆ. சி: பரமசாமி

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளை இறைஞ்சும்

**கே. கே. ஏ. கந்தையாபிள்ளை**

[ஏற்றுமதி, இறக்குமதியாளர் — பலசரக்கு வர்த்தகம்]

316, ஆஸ்பத்திரி வீதி,
26, வைமன் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 22311 தந்தி: 'முருகன்'

நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருளை இறைஞ்சுகின்றோம்.



**★ ஆர். பி. (B). புக்கிங் சென்ரர் ★**



யாழ்.—கொழும்பு, யாழ்.—மட்டுநகர், யாழ்.—திருமலை, யாழ்.—கண்டி
ஆகிய இடங்களுக்கான மினி பஸ் லக்ஷறி பஸ் ஆசனப்பதிவுகளுக்கு

**ஆர். பி. (B) புக்கிங் சென்ரர்**

வைரவர் கோவில் அருகில், நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனத்துக்கு வடமாகாணத்தில் கிளை ஸ்தாபனம் எதுவுமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org